Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | ஆனி 22 | [06-07-93] | செவ்வாய்க்கிழமை | ஓசை 138

## ஆனையிறவு முகாமை தாக்க புலிகள் திட்டமிடுகின்றனராம்

(கொழும்பு)

ஆனையிறவு இராணுவ முகாம்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என வடக்கில் உள்ள சிறிலங்காப்படைகள் கருதுவதால் வடக்கில் துருப்புக்களும் விமானப்படையினரும் உசார்ப்படுத்தப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஐலன்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. எந்த நிலைமையையும் சமாளிக்க இராணுவமும் விமானப்படையும் உசார்ப் படுத்தப்பட்டுள்ளதாகவும் ஆனையிறவிலுள்ள படையினருக்கு மேலும் பலம் சேர்க்கும் வகையில் அநுராதபுரத்திலிருந்தும் கொழும்பிலிருந்தும் மேலதிகப் படைகள் அங்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதலை மேற்கொள்ளும் பொருட்டு புலிகள் பெரும்தொகை ஆர். பி. ஜி. களை கடந்தமாதம் பெற்றுள்ளதாகவும் ஐலன்ட் கூறியது. (3ஆம் பக்கம் பார்க்க)

## 3 கடற்படையினர் காயம்

(கொழும்பு)

கிளாலி கடற்பகுதியில் கடந்த முதலாம் திகதி கடற்புலிகளுடன் நடந்த மோதலில் மூன்று கடற்படையினர் காயமடைந்ததாக கொழும்பில் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன. இவர்களில் கடற்படை சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் அநுராதபுரம் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் மற்றைய இருவரும் பலாலி தளத்திற்கு சிகிச்சைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படு (3ஆம் பக்கம் பார்க்க)

# கரும்புலிகள் சகாப்தத்தில் போராட்டம்; புதிய பரிமாணம் பெற்று விரிவடையும்

## தலைவர் பிரபாகரன் உறுதி



கரும்புலிகள் நாளான நேற்று கரும்புலி உறுப்பினர்கள் மத்தியில் தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் உரையாற்றுவதை படத்தில் காணலாம்.

**இது கரும்புலிகளின் சகாப்தம். இடியும் மின்னலுமாகப் புலிகள் போர்க்கோலம் கொண்டுவிட்டகாலம். இந்த புதிய யுகத்தில எமது போராட்டம் புதிய பரிமாணங்களில் விரியும். சாவுக்கு விலங்கிட்ட மறவர்கள் புதிய சரித்திரம் படைப்பார்கள். எமது சந்ததியின் விடிவுக்கு விளக்கேற்றி வைப்பார்கள். கரும்புலிகளின் புனித தினமாகிய இன்றைய நாளில், வரைபடாத சித்திரங்களாகவும், எழுதப்படாத சரித்திரங்களாகவும் எமது வாழ்வுக்காக தமது வாழ்வைத் துறந்த அந்த அற்புதமான தியாகிகளை எமது நெஞ்சில் நிறுத்திப் பூசிப்போமாக.**

இவ்வாறுகரும்புலிகள்நாளான நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் பிரிவின் கரும்புலி வீரர்கள் மத்தியில் தமிழீழ தேசியத் தலைவர் திரு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் ஆற்றிய உரையில் தெரிவித்தார். அவர் ஆற்றிய உரையினை முழுமையாக கீழே தருகிறோம்.

எனது அன்பிற்குரியவர்களே!

கரும்புலிகள் நாளாகிய இன்றைய தினத்தில், கரும்புலி வீரர்களாகிய உங்கள் மத்தியில், கரும்புலிகள் பற்றி பேசுவதற்கு ஒருசந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, இன்றைய தினத்தில், முழு இலங்கைத் தீவையும் அதிர வைத்த ஒரு சம்பவம் நிகழ்ந்தது. எமது விடுதலை இயக்கத்தின் முதலாவது கரும்புலி வீரன் கப்டன் மில்லர், ஓர் ஒப்பற்ற சாதனையை நிலை நாட்டினான். எமது விடுதலை வரலாற்றில் என்றுமே நிகழாத ஓர் அதிசயம் அன்று நிகழ்ந்தது. எதிரியின் அசைக்க முடியாத கோட்டையாகத் திகழ்ந்த ஓர் இராணுவ முகாமை இந்த இளம்புலி வீரன், தனித்த ஒருவனாகச் சென்று தகர்த்தெறிந்தான். ஒரு பெரிய படையணியாலும் செய்ய முடியாத பாரிய இராணுவ சாதனையை ஒரு தனி மனிதனாகச் சென்று இவன் சாதித்து முடித்தான். எரிமலையைச் சுமந்து சென்று எதிரியின் பாசறைக்குள் வெடிக்கவைத்தான்.

இந்தப் பூகம்பமான தாக்குதல் நிகழ்வு அன்றைய வரலாற்றுச் சூழ்நிலையையே மாற்றியமைத்தது. எதிரியின் சைனியங்கள் நிலைகுலைந்து பின்வாங்கின. ஒரு பெரிய படையெடுப்பின் பேரழிவிலிருந்து யாழ்ப்பாணம் தப்பிக்கொண்டது. தனி மனிதனாக, எமது போராளி ஒருவன். தன்னை அழித்து தனது தேசத்தை பேரழிவிலிருந்து காப்பாற்றினான்.

### தன்னைவிட இலட்சியத்தை காதலிக்கும் கரும்புலி வீரன்

ஆனால் ஒரு கரும்புலிவீரன் தன்னைவிட தனது இலட்சியத்தையே காதலிக்கிறான். தனது உயிரைவிட தான் வரித்துக்கொண்ட குறிக்கோளையே நேசிக்கிறான். அந்த குறிக்கோளை அடைவதற்கு தன்னை அழிக்கவும் அவன் தயாராக இருக்கிறான். அந்த குறிக்கோள் அவனது சுயத்திற்கு அப்பால் நிற்கும் மற்றவர்களின் நலன் பற்றியது; நல்வாழ்வு பற்றியது. மற்றவர்கள் இன்புற்று இருக்க வேண்டும் என்பதற்காக தன்னை இல்லாதொழிக்கத் துணிவது தெய்வீகத் துறவறம். அந்தத் தெய்வீகப் பிறவிகள்தான் கரும்புலிகள்.

தேசிய விடுதலை என்ற உயரிய இலட்சியத்தைத் தழுவிக்கொள்ளும் ஒவ்வொருவனும் முதலில் தன்னை விடுதலை செய்து கொள்ள வேண்டும். தனது மனவுலக ஆசைகளிலிருந்தும், அச்சங்களிலிருந்தும் தன்னை விடுதலை செய்துகொள்பவன்தான் உண்மையில் விடுதலை வீரன் என்ற தகைமையைப்பெறமுடியும். மனமானது பயங்களிலிருந்து விடுதலை பெறும்போது தான் வீரம் தோன்றுகிறது. துணிவு பிறக்கிறது. இந்த மனவியல் உண்மையை நான் ஆரம்பத்திலிருந்தே எமது போராளிகளுக்கு எடுத்துரைத்து வருகிறேன்.

பயம் என்பது பலவீனத்தின் வெளிப்பாடு. கோழைத்தனத்தின் தோழன் உறுதிக்கு எதிரி. மனித பயங்களுக்கு எல்லாம் மூலமானது மரணபயம். இந்த மரணபயத்தைக் கொன்றுவிடுபவன்தான் தன்னை வென்றுவிடுகிறான். அவன் தான் தனது மனச்சிறையிலிருந்து விடுதலை பெறுகிறான்.

# கரும்புலிகளுக்கு மக்கள் உணர்வு பூர்வ அஞ்சலி

## வடபகுதி எங்கும் நினைவு நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

எதிரிகளை திகைப்பிலும், உலகை வியப்பிலும் ஆழ்த்திய கரும்புலிகளின் நினைவுநாள் நேற்று எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. வீதி எங்கும கொடிகளும் பதாகைகளும், சுவரொட்டிகளும் காணப்பட்டன. விசேடமாக அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் கரும்புலிகளின்உருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன. வீடுகளிலும் கரும்புலிகளின் உருவப்படங்கள்வைக்கப்பட்டு மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

முக்கிய இடங்களில் ஒலிபெருக்கிகளில் கரும்புலிகள் பாடல்கள்ஒலித்தன.அரச தனியார்துறை நிறுவனங்கள் நேற்று கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு இயங்கவில்லை. பலவேறு இடங்களிலும் உருவப்படம நினைவுதூபி திறப்பு விழா நிகழ்வுகள் இடம்பெற்றன. மக்கள் உணர்வுபூர்வமாக நேற்று நடைபெற்ற கரும்புலிகள் நினைவுப்பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

### வடமராட்சியில்

நெல்லியடி கரும்புலிகள் நினைவாலயத்தில் நேற்றுக் காலை மட்டு-அம்பாறை மாவட்ட விசேட தளபதி கருணா தமிழீழ தேசியக் கொடியை ஏற்றினார். தொடர்ந்து நெல்லியடி பூ'ம கள் சனசமூக நிலையத்தில் கரும்புலி எழுச்சிக் கிராம அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது. அடிக்கல்லை வடமராட்சி தளபதி அருணா நாட்டி வைத்தார்.

தொடர்ந்து இரவு7.05மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் வடமராட்சி அரசியற்றுறை பொறுப்பாளர்திரு. பா. வைந் தமிழன் தலைமையில் கடற்புலிகளின் நடுகைக்கல் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. ஆரம்பத்தில் யாழ். மாவட்ட துணைத் தளபதி திரு. சேரனும் வடமராட்சி சிறப்புத் தளபதி திரு. செல்வமும் மங்களவிளக்கு ஏற்றி வைத்தனர். கரும்புலிகளின் நினைவு நடுகல் கல்லை தமிழீழ கடற்புலிகள் சிறப்புத்தளபதி திரு. சூசை திரை நீக்கம் செய்து வைத்தார்.

கரும்புலி கப்டன் மில்லரின் உருவப்படத்திற்கு அவரது தாயாரும் மேஜர் காந்தரூ-ன் உருவப்படத்திற்கு அவரது தாயாரும் கடற்கரும்புலி கப்டன் வினோத்தின் உருவப்படத்திற்கு அவரது

( 3 ஆம் பக்கம் பார்க்க )

## விமான அச்சுறுத்தலிலும் மக்கள் திரண்டனர்

வடமராட்சியில் நேற்று நடைபெற்ற கரும்புலிகள் நாள் பொதுக்கூட்டத்தை குழப்பியடிக்கும் நோக்கத்துடன் நேற்றிரவு சிறிலங்கா விமானப்படைக்கு சொந்தமான இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் கூட்டம் நடைபெற்ற இடத்துக்கு மேலாகப் பறந்தன. இரவு 8-30 மணியளவில் இவ் இரண்டு குண்டு வீச்சு விமானங்களும் விளக்குகளை எரியவிட்டவாறு பேரிரைச்சலுடன் அருகருகேகூட்ட மைதானத்திற்கு மேலாக பறந்த போதுகூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. சிறிது நேரம் மின் விளக்குகள் அணைக்கப்பட்டு பொதுக்கூட்டத்தில் தடங்கல் ஏற்பட்டபோதிலும் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. விமான அச்சுறுத்தல் மத்தியிலும் பெருமளவு மக்கள் இக் கூட்டத்தில்கலந்து கொண்டனர். இதேவேளை மாலையில் உலங்கு வானூர்தியும் இவ் இடத்தை நோட்டமிட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆனமடுவ குண்டுவெடிப்பு 4 மாணவர் பலியாகினர்

ஆனமடுவவில் குண்டு ஒன்று வெடித்ததனால் நான்கு மாணவர் பலியாகினர். வடிவகமங்காவ அரசினர் பாடசாலைக்கு அருகில் ஒரு வயல் வெளியில் நேற்றுமுன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது.

வயலிற்குள் இருந்த பாழடைந்த கிணறொன்றில் ஒரு பே..த்தல் வடிவில் இருந்த குண்டொன்றை திறக்க முற்பட்டபோது அது வெடித்ததாக சம்பவத்தின்போது உயிர் தப்பிய மாணவன் ஒருவன் தெரிவித்தார்.

இக் குண்டு வெடிப்பினால் 3 மாணவர்கள் அந்த இடத்திலேயே பலியாகினர். மற்றொருவர் ஆஸ்பத்திரியில் மரணமானார். இவர்களில் ஒருவருக்கு வயது 9. ஏனையோர் 13 வயதினர் ஆவர்.

### "0" பிரிவு இரத்தம் தேவை

'0'பி ிவு இரத்தம் தேவைப்படுகிறது. இவ் இரத்தப் பிரிவினை உடையவர்கள் 18, வேம்படி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள சஞ்சீவி பணியகத்தில் தொடாபு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## எமது போராட்ட மரபில் ஒரு புதிய போர் வடிவம்

முதன் முதலாக, எமது போராட்ட வரலாறு தியாகத்தின் அதியுன்னதமான ஒரு அற்புதத்தைப் பதிவு செய்து கொண்டது. அன்றிலிருந்து எமது போராட்ட மரபில் ஒரு புதிய அத்தியாயம் திறக்கப்பட்டது. என்றுமில்லாத வகையில் ஒரு புதிய போர்வடிவம் அறிமுகப்படுத்தப்பட்டது.

கப்டன் மில்லருடன் கரும்புலிகளின் சகாப்தம் ஆரம்பமாகியது. என்றுமே உலகம் கண்டிராத, எண்ணிப்பார்க்கவும் முடியாத, தியாகப் படையணி ஒன்று தமிழீழத்தில் உதயமாகியது.

கரும்புலி வீரர்களின் தோற்றமும், தற்கொடைப் படையாக அவர்களின் வளர்ச்சியும் எழுச்சியும், மிகவும் நுட்பமான அவர்களின் போர்ச் சாதனைகளும் எமது போராட்டத்தின் ஒரு வரலாற்றுத் தேவையாகவே எழுந்தது.

நாம் இன அழிவை எதிர் கொள்ளும் ஒரு சிறிய தேசிய சமுதாயம். எமக்கு குரல் கொடுக்கவோ, கை கொடுக்கவோ உலகில்எவரும் இல்லை. நாம் தனித்து நிற்கிறோம். எமது சொந்தக் கால்களில் நிலைத்து நிற்கிறோம். பலம் வாய்ந்த எதிரிகள் எம்மைச் சூழ்ந்து நிற்கிறார்கள். எம்மை ஒழித்துக்கட்ட உறுதி பூண்டு நிற்கிறார்கள். முழு உலகமுமே ஒன்று திரண்டு எமது எதிரிகளுக்கு முண்டுகொடுத்து வருகிறது. இந்த இக்கட்டான, ஆபத்தானசூழ்நிலையில், நிர்க்கதியாக நிற்கும் ஒரு மக்கள் சமூகம் என்ற ரீதியில், நாம் எம்மாலான சகல வழிகளையும் கையாண்டு, எமது சக்திகள் அனைத்தையும் பிரயோகித்து, ஒரு தற்காப்புப் போரை நிகழ்த்தவேண்டும். இந்தத் தேவையை, நிர்பந்தத்தை நாம் அசட்டைசெய்ய முடியாது. அல்லாத பட்சத்தில், நாம் இனவாரியாக அழிந்துபோவதைத் தவிர்க்கவே முடியாது.

## பலவீனமான எமது மக்களின் பலம் பொருந்திய ஆயுதம்

பலவீனமான எமது மக்களின் மிகவும் பலம்வாய்ந்த ஆயுதமாகவே, கரும்புலிகளை நான் உருவாக்கினேன் கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள். எமது போராட்டப் பாதையின் தடைநீக்கிகள். எதிரியின் படைபலத்தை மனபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்.

கரும்புலிகள் வித்தியாசமானவர்கள், அபூர்வமான பிறவிகள். இரும்பு போன்ற உறுதியும் பஞ்சுபோன்ற நெஞ்சமும் கொண்டவர்கள் தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் காணும் ஆழமான மக்கள் நேயம் படைத்தவர்கள்.

இந்த உலகில் வாழும் மனிதன் ஒவ்வொருவனும் எல்லாவற்றிற்கும் மேலாக தன்னையே காதலிக்கிறான். தனது உயிரையே நேசிக்கிறான். உயிர் வாழவேண்டும் என்று துடிக்கிறான். மனிதன் உயிரை நேசிப்பதால், உயிர்வாழவிரும்புவதால், உயிர் அற்றுப்போகும் சாவு என்ற இல்லாமை நிலைக்கு பயப்படுகிறான். இது மனித இயல்பு. இயற்கையின் நியதி.

## எறிந்தவர்கள் கரும்புலிகள்

கரும்புலிகள் பயத்தின் வேர்களைப் பிடுங்கி எறிந்தவர்கள். சாவு அவர்களிடம் சரணடைந்துவிடுகிறது. மரணத்தின் நாளை அவர்கள் எதிர் பார்த்துக் காத்திருப்பார்கள். சாவு பற்றிஅவர்கள் சிந்திப்பதில்லை. தம்மை அழிக்கும் அந்த இறுதிக் கணத்திலும் தமது இலக்கை அழிக்கும் நோக்கிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருப்பர் இலட்சிய உறுதியில் அவர்கள் இரும்பு மனிதர்கள்.

'கரும்புலி' என்ற சொற்பதத்தில் கருமையை மனோதிடத்திற்கும், உறுதிப்பாட்டிற்குமே நாம் குறிபபிடுகிறோம். இன்னொரு அர்த்த பரிமாணத்தில் இருளையு அது குறியீடு செய்யும். பார்வைக்குப் புலப்படாத, பூடகமான, இரகசியமான தன்மையையும் . செயற்பாட்டையும் அது குறித்து நிற்கும். எனவே 'கரும்புலி' என்ற சொல் பல அர்த்தங்களைக் குறிக்கும் ஆழமான படிமமாக அமையப்பெற்றிருக்கிறது.

இந்த இரகசியத் தன்மை கரும்புலிகளின் செயற்பாட்டு வெற்றிக்கு மூலாதாரமானது. ஆளுக்கும் பெயருக்கும் அப்பால, அந்த தனிமனித தனித்துவத்திற்கு அப்பால், செயற்பாடே இங்கு முதன்மை பெறுகிறது. மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே ஒரு போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகிறது. பல கரும்புலி வீரர்கள் இன்று பெயர் குறிப்பிடாத கல்லறைகளில் அநாமதேயமாக உறங்கிய போதும் அவர்களது அற்புதமான சாதனைகள் வரலாற்றுக் காவியங்களாக என்றும் அழியாப் புகழ் பெற்று வாழும்.

## சரித்திர நாயகர்களுக்கு சிரம்தாழ்த்தி வணக்கம்

முகத்தை மறைத்து பெயரையும் புகழையும வெறுத்து. இலட்சிய மூச்சாக தமிழீழ விடுதலைக் காற்றுடன் கலந்துவிட்ட இந்த சரித்திரநாயகர்களை நான் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

மனித தியாகத்தின் இமயத்தைத் தொட்டுவிட்ட இந்த இனிமையானவர்களை நான் அறிவேன். அவர்களது நெஞ்சத்தின் பசுமையில் ஊற்றெடுத்த உணர்வுகளையும் நான் புரிவேன். ஏதோ ஒன்று, மனித விடிவை நோக்கி நகரும் உந்து சக்தியாக அவர்களை ஆட்கொண்டிருந்தது. அந்த விடுதலையின் தாகத்தைத் தீர்க்க எதையும் செய்வதற்கு அவர்கள் தயாராக இருந்தார்கள். அவர்களை அரவணைத்து விடையளிக்கும்போது இனம் புரியாத உணர்வுகளால் எனது ஆன்மா நடுங்கும்.

## கரும்புலிகள் தியாகம் கண்டு உலகம் மலைத்து விட்டது

ஒரு புனித யாத்திரையில் அவர்கள் போனார்கள். கண்ணீர் வடித்து நிற்கும் எமது மக்களுக்கு ஒரு புதிய வாழ்வு பிறக்கும் என்ற அசையாத நம்பிக்கையில் அந்தத் தியாகப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அந்த புனிதவாளர்களை எண்ணும்பொழுது எல்லாம்

(3ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள், றேடியோக்கள்**

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஓட்டோமற்றிக், வைன்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும் டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஆரியகுளம் சந்தி ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் (சி-6931)

**ஜோதிடம்**

கைரேகை, எண்ஜோதிடம், ஜாதகப்படி உங்கள் பலாபலனறிய, விவாகப் பொருத்தம், ஜாதகம் எழுத, அதிர்ஷ்ட எண்களில் பெயரமைக்க, உங்களுக்கு ஏற்ற மணமக்களைத் தேடித்தர வேலணை சோதிடர். V. A. சிவராசா 152B, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (5281)

**விற்பனைக்கு**

இரண்டுமாதங்கள்கொண்ட Hyline (கைலைன்) பேட்டு குஞ்சுகளும் அடைவைப்பதற்கு உகந்த வெள்ளடி, பன்ரம், பாமஸ் முட்டைகளும் உடன் விற்பனைக்கு உண்டு. 70/6 ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம் (சி-6960)

**வைத்திய சேவை**

இரெட்ணம் வைத்திய சாலை 129 ஸ்ரேஷன் றோட் யாழ்ப்பாணத்தில் சகல நோய்கட்கும் நவீனமருத்துவமுறைப்படி சிகிச்சையை வழங்குகிறது இரவு பகல் சேவையுடன் அவசர நோயாளர் தங்கும் வசதியும் உண்டு நிர்வாகி "இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவக் கலாநிதி" க. இராசரெட்ணம். (5285)

**கைதாகி விடுதலை**

(கொழும்பு)

சுன்னாகம் பகுதியிலுள்ள கிறிஸ்தவ தேவாலயமொன்றைச் சேர்ந்த உதவிப் போதகர் ஒருவர்கொழும்பில் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

**நூலகம் திறப்பு**

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றில் பருத்தித்துறை பிரதேச சபை பொது நூலகமொன்றைத் திறந்து வைத்துள்ளது பருத்தித்துறை பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு. சி முருகேசபிள்ளையின் ...

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 10 — 02 — 1940



உதிர்வு: 18 — 06 — 1992

திருமதி

### குழந்தையன் நேசமணி

திதி: 06-07-1993

கண்ணிற்கு இமை காவலும்
கடலிற்கு கரை காவலும் போல
கருத்தான நம் வாழ்விற்கு
காவலாய் நின்ற எம் தாயே
ஓடிச் சென்ற காலமது
ஓராண்டு ஆயினுமே
என்றுமே அழியாத உன்பாசமும்
எழில் பொங்கும் வதனமும்
எமை விட்டு எந்நாளும் நீங்காது.

சரஸ்வதி வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.
06-07-93

பிரிவால் வாடும்
- குடும்பத்தினர்.
(5227)

## 6-ம் ஆண்டுநினைவஞ்சலி

திருகோணமலை மண்ணில்
07. 10. 1966



நெல்லியடி மண்ணில்
06. 07 1987

### 2-ம்லெப்டினன்ட் தியாகு

(புத்திசிகாமணி சித்திரவேல்)
(கும்புறுப்பிட்டி, திருக்கோணமலை)

[06 07. 87 அன்று நெல்லியடியில் வீரச்சாவடைந்தார்]

ஆறு ஆண்டுகள் ஓடிப்போனதோ!
அருமை மைந்தனே வீரத் தியாகுவே!
ஏறுக் கூட்டத்தை எதிர்த்த தீரனே!
எங்கு சென்றனை! எங்கு சென்றனை!
வீறு போட்டெழுந் தெதிரி படைகளை;
வீழ்த்தி நின்றனை வீரவேங்கையே!
சீறு புலியே சினந்த நெஞ்சே!
செருக்கர் தலைகளை அறுத்த குமாரனே.

## குருநாகல் மாவட்டத்தில் முஸ்லிம்கள் புறக்கணிப்பு

வறிய மக்களுக்கு கடன் வழங்கும் திட்டத்தில் புறக்கணிக்கப்படுவதாக குருநாகல் மாவட்ட முஸ்லிம்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பிரதேச செயலாளர் நாயகத்தினால் கிராம சேவகர் மட்டத்தில் வழங்கப்பட்டு வரும் 5000/- ரூபா தொடக்கம் 7500/- ரூபா வரையிலான வீடமைப்பு கடன் திட்டத்திலேயே குருநாகல் மாவட்ட முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனராம்.

இக் கடன்களுக்காக விண்ணப்பித்த சுமார் 12,000 குடும்பங்களுக்கு பல வருடகாலமாகியும் இன்னமும் கடன் வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

## 3 எயர்பஸ் விமானங்கள் எயர்லங்கா கொள்வனவு

[கொழும்பு]

முன்னர் கொள்வனவு செய்வதென திட்டமிட்டு பின்னர் ரத்துச் செய்யப்பட்ட 5 எயர் பஸ் விமானங்களில் மூன்றினை கொள்வனவு செய்ய எயர் லங்கா நிறுவனம் தீர்மானித்துள்ளது. இத்தகவலை எயர் லங்காவின் புதிய தலைவர் டி. எஸ். ஆட்டிக்கல தெரிவித்தார்.

இக்கொள்வனவிற்கான செலவுகள் குறித்து தீர்மானிக்கப்பட்ட அமைச்சரவை உப குழு இன்னமும் 2 மாதங்களில் கூடி இறுதித் தீர்மானத்தை எடுக்கும் எனவும் அவர் கூறினார்.

இறுதித்தீர்மானத்தை எடுக்கும் அமைச்சரவை உப கமிட்டிக்கு ஆலோசனை வழங்குவதற்காக எயர் லங்காவின் தற்போதைய பணிப்பாளர் சபையிலுள்ள இருவரை சேர்த்துக் கொள்வதென ஜெனரல் சேபால ஆட்டிக்கல தீர்மானித்துள்ளார்.

## வங்கியிடம் கடன்பெற போலி ஆவணம்

### வர்த்தகர் நீதிமன்றில் ஆஜர்

(கொழும்பு)

போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து பிரபல வர்த்தகர் ஒருவர் கொழும்பிலுள்ள மக்கள் வங்கிக்கிளை ஒன்றிலிருந்து 35 லட்சம் ரூபாவை கடனாகப் பெற்றுக்கொண்ட மோசடியொன்று பற்றி அண்மையில் தெரியவந்துள்ளது.

இந்த மோசடி பற்றிய விசாரணைகளை மேற்கொண்டிருக்கும் சி ஐ டியினர் இதுகுறித்து வங்கி அதிகாரிகளிடம் புலன் விசாரணைமேற்கொண்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட வர்த்தகர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது போலி ஆவணங்களை சமர்ப்பித்த குற்றத்தை வர்த்தகர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஆனால் இந்தப் போலி ஆவணங்களை கண்டுபிடித்து உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்த சிரேஷ்ட அதிகாரிகளில் ஒருவர் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளாராம்.

## பஸ் போக்குவரத்திலும் கூட பாரபட்சம் காட்டப்படுகிறது

தமிழ்ப் பாடசாலைகளின் முன்பாக பஸ்களை நிறுத்தி மாணவர்களை இறக்கி விடவோ, ஏற்றிச் செல்லவோ மக்கள் மயமாக்கப்பட்ட போக்குவரத்துச் சபைகளின் சாரதிகள் மறுத்து வருவதாக கூறப்படுகின்றது.

குறிப்பாக தெகியோவிட்ட தெரணியகல பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் நூரி, மாலிபொட, லங்சஹேன போன்ற தோட்டப் பகுதிகளிலிருந்து வரும் மாணவர்கள் பாடசாலைக்கு சமீபத்தில் பஸ்கள் நிறுத்தப்படாமையினால் பஸ்நிலையம்வரை சென்று திரும்ப வேண்டிய நிலைக்கு உள்ளாகுகின்றனர்.

எனினும் சிங்களப் பாடசாலைகளுக்கு முன்பாக பஸ்கள் நிறுத்தப்பட்டு மாணவர்களை ஏற்றிச் செல்வதும், இறக்கி விடுவதும் நடைபெறுகிறது.

## சீமெந்து தொழிற்சாலை மூடும் முடிவு ஒத்திவைப்பு

[கொழும்பு]

காங்கேசன் சீமெந்து தொழி... காலி, புத்தளத்தில் இயங்கும் தொழிற்சாலைகள் மக்...

## 'சுதந்திரப் பறவைகள்' இதழ் இன்று வெளிவருகிறது

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடான "சுதந்திரப் பறவைகள்" ஆடி மாத இதழ் இன்று வெளிவருகிறது. இதில் "பெண்களுக்கு எதிரான கொடுமைகள் ஆய்வுகள் தரும் திடுக்கிடும் தகவல்கள்" என்ற தலைப்புச் செய்தியும், ஆணாதிக்கத்திற்கு எதிரான போராட்டம் ஆண்களுக்கு எதிரான போராட்டமல்ல" என்ற ஆசிரியர் தலையங்கமும் "விழிகள் திறந்திருக்கின்றன" என்ற சிறுகதையும் விளக்கேந்தும் பெருமாட்டிகள் இருளில் வாடுகின்றனர்" என்ற கட்டுரையும் வெளியாகியுள்ளன.

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு**

## முடிவுகள்

| | | இலக்கங்கள் |
|---|---|---|
| 1ஆம் பரிசு | 5000 ரூபா | - 03516 |
| 2ஆம் பரிசு | 3000 ரூபா | - 23628 |
| 3ஆம் பரிசு | 1000 ரூபா | - 15008 |

250 ரூபா பெறுமதியான 25 ஆறுதற் பரிசுகள்:

| | | | |
|---|---|---|---|
| 1) 08615 | 2) 10587 | 3) 04129 | 4) 17965 |
| 5) 22483 | 6) 08772 | 7) 11227 | 8) 24403 |
| 9) 08437 | 10) 24425 | 11) 16140 | 12) 21021 |
| 13) 21713 | 14) 01667 | 15) 24427 | 16) 21158 |
| 17) 18037 | 18) 17164 | 19) 23269 | 20) 03842 |
| 21) 22554 | 22) 01001 | 23) 22945 | 24) 04383 |
| 25) 03981 | | | |

மேற்படி பரிசுக்கு உரியவர்கள் எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்பதாக கல்லூரி அலுவலக நேரத்தில் தமது பற்றுச்சீட்டுக்களுடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

[5283]

பழைய மாணவர் சங்கம்
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

## நினைவு கூருகின்றோம் ... 1993-07-06

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் பருத்தித்துறை-மந்திகைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். தியாகு** (பு. சித்திரவேல் - கும்புறுப்பிட்டி-திருமலை)

**மகான்** (சின்னத்தம்பி பஞ்சலிங்கம்- உடுத்துறை, தாளையடி - யாழ்)

அம்பாறை - செம்மணிக்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 06 தமிழர்கள்

1988ஆம் ஆண்டு மட்டு - கொக்கட்டிச்சோலைப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டு எமைப் பிரிந்த-

**காளி** (ஞானசேகரம் சின்னத்தம்பி - பழுகாமம் 01-பெரிய போரதீவு - மட்டு)

1989ஆம் ஆண்டு அநுராதபுரத்தில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கிளிநொச்சி-பரந்தனைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1990ஆம் ஆண்டு பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**பிரதீபன் உமா** (சுப்பையா சந்திரன் - இருபாலை, கோப்பாய் - யாழ்)

அம்பாறை – கஞ்சிகுடியாற்றுப் பகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 05 தமிழர்கள்.

கிண்ணியாப் பகுதியில் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் உயிருடன் ரயர் போட்டு எரிக்கப்பட்ட 06 தமிழர்கள்.

திருமலை - மூதூர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 10 தமிழர்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் (தலைமன்னார்) பயணம் செய்து கொண்டிருக்கையில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலின் போது படகுடன் மூழ்கடிக்கப்பட்டு கொல்லப்பட்ட 09 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு ...

தேச சபை விசேட ஆணை யாளர் திரு. சி முருகேசபிள்ளையின் நடவடிக்கைகளையடுத்து செம்பியன்பற்று கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இப்போது நூலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (25)

## விரைவில் தரமுயரும்?

கைதடியில் இருக்கும் சித்த மருத்துவ போதனா வைத்தியசாலை விரைவில் தரம் உயர்த்தப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வைத்திய சாலையில் குழந்தைகள் வார்ட் ஒன்றும், சத்திரசிகிச்சை வார்ட் ஒன்றும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

யாழ். சித்த மருத்துவத்துறை மாணவர்கள் சங்கம் அமைச்சுடன் நடத்திய பேச்சுக்களில் இதற்கான இணக்கம் காணப்பட்டிருப்பதாக சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர் ஜயாரிய மொடகம கூறியுள்ளார்.

## சேவைக்கால பயிற்சி

[பருத்தித்துறை]

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, புலோலிக் கொத்தணிப்பாடசாலைகளில் ஆண்டு ஒன்றில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நாளை நடைபெறவுள்ளது ஏற்கனவே நாகர் கோவில், உடுத்துறைக் கொத்தணிப் பாடசாலைகளுக்கு அம்பன் பாடசாலையில் நடைபெற்ற பயிற்சி வகுப்பிலும் உடுப்பிட்டி, கரவெட்டி, நெல்லியடி கொத்தணிப் பாடசாலைகளுக்கு நெல்லியடிப் பாடசாலையில் நடாத்தப்பட்ட பயிற்சி வகுப்பிலும் கலந்து கொள்ளத் தவறிய ஆண்டு ஒன்றில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளலாமென வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரை அறிவித்துள்ளார். [25]

சிறு புலியே சினந்த நெஞ்சே!
செருக்கர் தலைகளை அறுத்த குமாரனே.

நெல்லியடியிலே களம் பொருகையில்
சிரம் நிமிர்த்திப் பின்வீர வித்து ஆகையில்;
என்ன நினைத்தனை சின்ன வீரனே!
தாயை நினைத்தாயா? தந்தையை அழைத்தாயா?
தமிழர் தலைவனை நினைத்து மாண்டாயா?
தமிழ் மண்ணை நினைத்தாயா? மக்களை நினைத்தாயா?
என்ன நினைத்தனை எங்கள் செல்வமே
எரியும் தீபமே! உருகி நிற்கின்றோம்.

06. 07. 93 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலி நிகழ்விலும், மதிய போசனத்திலும் உற்றார் உறவினர், நண்பர்கள், சகபோராளிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


தம்பசிட்டி - வாணக்குடியிருப்பு,
பருத்தித்துறை.

- குடும்பத்தினர்,
உறவினர்.

(5254)

## 2-ம் ஆண்டு நினைவு கூருகிறோம்

மலர்வு
25
—
02
—
1985



உதிர்வு
30
—
06
—
1991

அமரர்

### திரு. வேலாயுதபிள்ளை செல்வரத்தினம்

[பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்]

திதி: 06 - 07 - 1993

அப்பா நீங்கள் எங்களை விட்டுச் சென்று
ஆண்டுகள் இரண்டு போனாலும்
இன்னும் நாங்கள், உங்கள்
இனிய நினைவுகளுடனே வாழ்கின்றோம்.

புகையிரத நிலையப் பக்கம்,
எழுதுமட்டுவாள்.

மனைவி, பிள்ளைகள்.
மருமக்கள். பேரன்.

(சி-6957)

[கொழும்பு]

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையை மூடுவதற்கு எடுக்கப்பட்ட முடிவை அரசாங்கம் தற்காலிகமாக ஒத்தி வைத்திருப்பதாக தெரியவருகிறது

சீமெந்து தொழிலாளர் யூனியனின்பிரதிநிதிகளுக்கும், வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளருக்கும் இடையேநடைபெற்ற பேச்சுக்களின்போது தொழிற்சாலை மூடுவதைதற்காலிகமாக ஒத்திவைப்பது என்று இணக்கம் காணப்படடிருப்பதாகக் கூறப்படுகிறது.

காலி, புத்தளத்தில் இயங்கும் தொழிற்சாலைகள் மக்கள் மயமாக்கப்பட்டுவிட்டதால் காங்கேசன் தொழிற்சாலையும் மக்கள் மயமாக்கப்பட வேண்டும். ஆனால் அதற்கு வாய்ப்பு இல்லாமையால் அதனை மூடுவதைத் தவிர வேறு வழி எதுவும் இல்லை எனினும் தொழிற்சாலை மூடப்படுவதை தற்காலிகமாக ஒத்திவைப்பது என்று இணக்கம் காணப்பட்டிருப்பதாக அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார்.

பூநகரி

படுத்தலாம் என்ற உண்மை புலனாகும் நீங்கள் கேடகிறீர்கள் இந்த சிங்கள நாட்டில் இருந்துதானே எங்களுக்கு பெற்றோல் வருகிறது டீசல் வருகிறது மருந்துவருகிறது இவர்களை எதிர்த்து நீங்கள் தனிஅரசு அமைத்தால் எங்கிருநது இவற்றைபெறுவதுஎன்று நாங்கள் தனி அரசு அமைத்தால் இந்த பொருள்களை எல்லாம் பெறுவதற்கு எமக்கு எத்தனையோ ஆயிரம் வழிகள் இருக்கின்றன. சிங்களவர் அவற்றை எங்கிருந்து எடுக்கிறார்கள். அவர்கள் பெற்றோலை உற்பத்தி செய்கிறார்கள ?

பாலை வனங்களில் தோன்றிய எத்தனையோ நாடுகள் இன்று செல்வம் கொழிக்கும் நாடுகளாக உள்ளன.

### சமஷ்டியை பரிசீலிப்போம்

இலங்கைத் தீவில் சிங்களவர்களுடன் கூடி வழவேண்டுமானால் தலைவர் சொன்னார் வடக்கு கிழக்கு மாகாணத்தை இணைத்து ஒரு சுயாட்சி தருவதானால் அதனை பரிசீலிக்க நாம் தயாராக இருக்கிறோம் என்று ஆனால் சிங்கள அரசு வடகிழக்கை எப்படியாக பிரிகக வேண்டும் என்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறது உங்களுக்கு நன்றாகத் தெரியும் விடுதலைப் புலிகள் நியாயமான ஒரு நிலைப்பாட்டைத் தான் கடைபபிடிக்கிறார்கள் என்று அரசியல் பேச்சாக இருந்தாலென்ன அரசியல் அணுகு முறையாக இருந்தால் என்ன எல்லா இடமும் நாம் நியாயத்தைத் தான் கேட்கிறோம் சமாதானத்தை கேடகிறோம் பேச்சு வார்த்தைக்கு கேட்கிறோம். உங்களால் தரக்கூடிய ஒரு சமஷ்டியையாவது தாஎன்று கேடகிறோம் அதுவும் இல்லையென்றால் நாம் என்ன செய்வது. எமக்கு வேறு வழியில்லையா? எங்கள் நாட்டை நாம் உருவாக்கி எங்களது அரசை அமைப்பதை தவிர வேறு வழியில்லை இதை சிங்களவர் நன்றாக உணர வேண்டும் குட்டக்குட்ட குனிபவனும் மடையன் என்று சொல்வார்கள். நாங் இவ்வளவு காலமும் கிடந்து அழுந்துகிறோம் தமிழ் மக்கள் எல்லாம் கொதித்தெழுந்து ஒரு பெரிய சக்தியாக எழுந்தால் நாம் எமது இலட்சியத்தை அடைய முடியாதா? முடியும் என்றார் அவர்.

கப்பட்டு கொல்லப்பட்ட 09 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு திருமலை சேருவில் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் துறைமுகம் பகுதியில் பொதுமக்கள் மீது மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையின் போது சுடடுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

வவுனியா - தாண்டிக்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினரால் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் போன சின்னத்தம்பனைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

1992ஆம் ஆண்டு மட்டு - பெண்டுகள்சேனையில் எமது முகாமைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

பவளமூர்த்தி/பிரகாஷ் (கனகசுந்தரம் சுதா - பாண்டிருப்பு, கல்முனை - அம்பாறை)

ஜெயசிறீ யேசுசிறீ (தம்பிராசா இராசதுரை - கல்முனை- அம்பாறை)

தட்சணாமூர்த்தி (முருகையாப்பிள்ளை தர்மலிங்கம்- காரைதீவு - அம்பாறை)

தேவானந்தன் (சங்கரன் மாதவன் - அம்பாறை)

கப்டன் ரமணி (தம்பிமுத்து நாகேந்திரம்-கிண்ணியடி, வாழைச்சேனை -மட்டு)

லெப். சொரூபசீலன்/விஜயன் (காத்தமுத்து தவராஜா- மாவடிவேம்பு, சித்தாண்டி - மட்டு)

2-ம் லெப். சிறீகாந்தலிங்கம் (சேதுகாவல்பிள்ளை சத்தியவடிவேல் - எருவில் - மட்டு)

குகநேசன் டிகோ (தங்கராசா காராளசிங்கம் - அம்பிளாந்துறை - மட்டு)

காந்தன்/கந்தன்/சேதுராஜா (தம்பிராசா கண்ணன் கிரான் - மட்டு)

ராஜன்/நாதன் (குமாரசாமி கலைச்செல்வன் - கிரான் குளம் - மட்டு)

புவி/வேணுகோபன் (தங்கராஜா சந்திரன்- மண்டூர்-மட்டு)

தயான்/சக்திவேல் (முத்துவேல் மோகன் - பொருவில், மன்னம்பிட்டி - பொலநறுவை)

உமைகுமார்/முகுந்தன் (கணபதி கதிர்காமலிங்கம்-பதுளை - மலையகம்)

யாழ் - பலாலிப் பகுதியில் எதிர்பாராத விதமாக மிதிவெடி வெடித்ததில் வீரச்சாவெய்திய-

2 ம் லெப். கலையரசன்/றொபின்சன் (அரிகரிதாசன் டொரீக்நோத் - கற்கோவளம், பருத்தித்துறை, மயிலிட்டி, காங்கேசன்துறை)

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காடையர்கள் இராணுவத் தாக்குதல்களுக்கு அஞ்சி இடம்பெயர்ந்து காட்ரோரக் கிராமங்களில் தங்கியிருந்தவர்களில் சிறிலங்கா இராணுவம் சுட்டுக்கொலை செய்த 18 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

### தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/6951)

### சிந்தனைக்கு

அமைதி ஒழுங்கும், ஆதிக்கமின்மையும் இணையும் போது தான், சமுதாயத்தின் உச்ச சிறப்புநிலை வெளிப்படுகின்றது.

- பியேர் ஜொஸெஃப் ப்ருதோன்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 06-07-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## அரசாங்கம் மட்டும் தான் போருக்கு பொறுப்பா!

தென்னாசியாவிலேயேபொருளாதார வளர்ச்சியில் முன்னணி நாடு என சிறிலங்கா அரசாங்கம் அடிக்கடி பெருமையுடன் தனது முதுகில் தட்டிக் கொள்கின்றது. அத்தோடு, உலக வங்கியும், ஏனைய நிதி நிறுவனங்களும் சிறிலங்காவின் பொருளாதாரம் யுத்தத்தின் மத்தியிலும் சிறப்பாக உள்ளது என தம்மைப் பாராட்டுவதாகத் தெரிவித்துக் கொள்கின்றது. அத்தோடு, கேட்டதை விடவும் அதிகமாகவே நிதி நிறுவனங்கள் கடன்களை வாரி வழங்குவதாகவும் அரசாங்கம் சொல்லிக்கொள்கின்றது.

ஆனால், இவை யாவும் உள்நாட்டின் பொருளாதாரத்தில் தெரிவதாக இல்லை. அரசாங்கத்தினால் வாக்குறுதி அளித்தது போன்று அரச ஊழியருக்கான சம்பள அதிகரிப்பை வழங்கமுடியவில்லை. அதே போன்று வேலை வாய்ப்பை வழங்க முடியவில்லை. விலைவாசிகள் கட்டுக்கடங்காமல் ஏறிச்செல்கின்றது. இதனால் மக்கள் மேலும் மேலும் பெரும் இன்னல்களுக்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவை போதாது என்று மின்சாரக் கட்டணத்தை அரசாங்கம் 30 வீதத்தால் அதிகரித்துள்ளது. அத்தோடு அத்தியாவசியப் பொருள்களுக்கு வழங்கிவரும் மானியங்களை வெட்டியுள்ளதோடு, ஜனசவிய, உணவுமுத்திரை, மகாபொல, இலவசப்பாடப் புத்தகம், இலவச மதியஉணவு, இலவச சீருடை போன்றவற்றையும் நிறுத்துவது குறித்தும் தீவிரமாகச் சிந்தித்தும் வருகின்றது.

ஆனால், சிறிலங்காவின் பொருளாதார நிலை இவற்றுடன் நின்றுவிடப்போவதில்லை. மேலும் மோசமான கட்டத்தை அடைவது தவிர்க்க முடியாது. அரசாங்கம் பெரும் வங்குரோத்து நிலையை அடைந்து கொண்டிருக்கின்றதென எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. ஆனால், இதனை எதிர்க்கட்சிகளின் வழமையான பல்லவி என முற்றாக ஒதுக்கி விடமுடியாது. ஏனெனில், அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் அதனையே வலியுறுத்துகின்றன.

இவை யாவற்றிற்கும் காரணம் வடக்கு-கிழக்கில் தொடர்ந்து நிகழும் போராகும். தேசிய வருமானத்தில் ஏழு வீதத்திற்கு மேல் அதாவது, வரவு செலவு திட்டத்தில் 20 சதவீதமளவில் யுக்

# காஷ்மீர் ஆளப்படவில்லை தக்க வைக்கப்பட்டிருக்கின்றது

## இந்தியப் பத்திரிகையாளர் குல்திப் நாயர்

ஒவ்வொரு முறையும் நான் காஷ்மீருக்குச் செல்லும் போதும் அது முன்பைவிடத் தூர விலகிச்செல்வதுபோலுள்ளது. சில மாதங்களுக்கு முன் நான் ஸ்ரீநகரிலிருந்தபோது எனக்கு ஏற்பட்ட உணர்ச்சியைக் குறிப்பிடும் சரியான சொல் 'அந்நியமாதல்' என்பதுதான். இப்போது மேலும் மோசம். நிலைபரம் கடுமையாகிக் கொண்டே போகிறது இந்த நிலைமைக்குப் பெரிதும் காரணம் ராணுவத்தினர். குறிப்பாக எல்லைக் காவல் படையினர்.

ஒரு மனித உரிமைக்குழுவின் உறுப்பினர் என்ற முறையில் பாதிக்கப்பட்ட பல குடும்பத்தினரின் வீடுகளுக்குச் சென்றேன் அவர்களுடைய முகத்தில் தென்பட்ட வேதனை நம் மனதைவாட்டுகிறது. ஒவ்வொருவருடைய கதையும் வித்தியாசமானது. ஆனால் அவர்களுடைய குற்றச்சாட்டு ஒன்று தான். அதுதான் எல்லைக் காவல்படையின் மிருகத்தனம். ''எதிர்த் தாக்குதலில் அத்துமீறலைப் புரிந்துகொள்ள முடிகிறது. எங்களுடைய எதிர்ப்பெல்லாம் படுகொலைகளைப் பற்றித்தான்'' என்று ஒரு ஓய்வுபெற்ற அரச ஊழியர் கூறினார்.

எல்லைக்காவல் படையினர் பணிபுரியும் நெருக்கடியான சூழ்நிலை. வட்டார மொழியுடனும் அவர்களுடைய கலாசாரத்துடனும் அறிமுகமற்ற நிலை இவைதான் காரணமென்று ஒரு அதிகாரிகூறினார். கடந்த மூன்று ஆண்டுகளில் ஏறத்தாழ 200 ஜவான்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

வியாபார நகரமான சோப்போரில் கடந்த ஜனவரி 6ஆம் தேதி மேற்கொண்ட அதே நடவடிக்கையை மூன்று மாதங்களுக்குப்பின் ஏப்ரல் 10-ம்தேதி ஸ்ரீநகரிலும் எல்லைக் காவல் படை மேற்கொண்டது. இரண்டு இடங்களிலும் குற்றவாளிகள் நடமாடிய இடங்களுக்குத் தீ வைக்கப்பட்டன. தப்பி ஓடியவர்களைக் கண்ணாபின்னாவென்று சுட்டனர். ஸ்ரீநகரில் ஐந்து பேர் இறந்தனர். சோப்போரில் 44பேர் மாண்டனர். எல்லைக்காவல் படையினர் காலிசெய்த கட்டடத்தை முன்னிட்டும் அவர்களிடமிருந்த இரண்டு தானியங்கித் துப்

களை நிர்வாகம் வெளிப்படையாகக் கண்டித்தது என்பதில் சந்தேகமில்லை. தேடப்படும் தீவிரவாதி கையில் கிடைக்கும் வரை ஒவ்வொருவரையும் இழுத்துச் செல்கின்றனர் என்பது தான் பொது மக்களிடையே ஆத்திரத்தைக் கிளப்பியுள்ளது. காவல் படையினர் எண்ணற்ற பேராசிரியர்களை, டாக்டர்களை, வக்கீல்களை, மாணவர்களை வெறும் சந்தேகத்தின் பேரில் அழைத்துக் கொண்டு போகின்றனர். விசாரணை ஸ்தலங்களில் விடுதலைக்கு முன்பாகத் துன்புறுத்தப் படுகின்றனர். விசாரணையின் போதே பலர் மரணமடைந்து விடுகின்றனர்.

பொதுவாகஅவர்கள் செயல்படும் விதம் இதுதான். நிராயுதபாணியானபொதுமக்களைச் சோதனையிடுகின்றனர். இதற்கு யாரும் விலக்கல்ல. முன்னாள் தலைமை நீதிபதிகூட இதுபோல் இரண்டு நாட்கள் அவதியுற்றார். ஏறத்தாழ 10,000 பேர் காவலிலுள்ளனர்.

காவலில் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது என்று ஸ்ரீநகர் வக்கீல்கள் சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர்கூறினார். நீதிபதிகளின் விசாரணை உத்தரவுகள் கூட அமுல்படுத்தப்படுவதில்லை. இதுசம்பந்தப்பட்ட வழக்குகள் கூட விசாரணையில் உள்ளன என்று அவர்கள் கூறினார்கள். இதிலிருந்து மீள எந்தவழியுமில்லை என்றனர். சட்டத்தின் மீது தங்களுக்கு நம்பிக்கை போய்விட்டது என்பதைவெளிப்படையாகவே கூறினர்.

தீவிரவாதிகள் விஷயத்தில் பாரபட்சம் காட்டுவதால் ஸ்ரீநகர் உயர் நீதிமன்றத்தை லாகூர் கோர்ட் என்று அவர்கள் கேலி செய்கின்றனர்.

உண்மையான சண்டை கோர்ட்டுகளில் அல்ல. வெளியேதான் நடக்கிறது. உறுதியான தொடர்ச்சியான வடிவில் அது நடக்கிறது. சிறு குழுக்கள் தங்கள் செயல்பாட்டை நிறுத்திக் கொண்டுவிட்டன. இரண்டு குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. ஒன்று ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி. இன்னொன்று ஹிஸ்பி முஜாஹிதீன்

களிடமுள்ளன என்று நிர்வாகத் தரப்பில் கூறுகின்றனர்.

துப்பாக்கிகளைப் பொது மக்கள்விரும்பவில்லை. பொது வாழ்வில் வன்முறையை அவர்கள் விமர்சிக்கின்றனர். மனித உரிமைக் கழகத்தைச் சேர்ந்தவரான ஹெச். என். வாஞ்சூவையும் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் தலைவர்களில் ஒருவரான அப்துல் அஹாட் குரு என்பவரையும் தீவிரவாதிகள் கொன்று விட்டனர் என்ற கருத்து நிலவுகிறது. துப்பாக்கிக் கலாசாரம் எங்களை அழித்து விடும் என்று ஒருஓய்வுபெற்ற நீதிபதி கூறினார்.

முஜாஹிதீன் ஆதரவு தலைவரென்று கருதப்படும் செய்யது அலி ஜிலானி, 'தனது தண்டனையின் கதை'' என்ற புத்தகத்தின் முதல் பகுதியில் முன்னாள் உள்துறை அமைச்சரான முப்தி முகம்மது சய்யீதின் புதல்வியான ரூபியா சய்யீதுவைக் கடத்தியதையும் முகம்மது சய்யீது மகதீயைக் கொன்றதையும் கண்டனம் செய்திருக்கிறார். என்றாலும் ஜிலானி மத்திய அரசை எதிர்க்கிறார் என்பதற்காக தீவிரவாதிகளிடம் மற்றவர்களைப்போல் பரிவு காட்டுகிறார். தீவிரவாதம் மக்களைப் பெருமளவு மாற்றியுள்ளது. தங்கள் போக்கில் காரியங்களைச் செய்து கொள்ள விரும்புகிறார்கள். துப்பாக்கியை வைத்திருப்பவர்களைப் பார்த்துப் பயப்படுகிறார்கள்.

நிர்வாகச் சீர்குலைவு போராட்டத்துக்கு இட்டுச் செல்கிறது. கவர்னர்களுக்கும் ஆலோசகர்களுக்கும் இடையே ஒருங்கிணைந்த செயல்பாடு இல்லை. கான்ஸ்டபிள் ரியாஸ் அமதுவைக் கொன்றதற்காக ஸ்ரீநகரில் சுமார் 15,000 பொலிஸ்காரர்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்டத் தெருவுக்கு வந்தனர். ஐ.நா. பார்வையாளர்கள் அலுவலகத்தின் முன்னே மறியல் நடத்திய பிறகு அவர்கள் பொலிஸ் தலைமை நிலையத்தைக் கைப்பற்றினர். எல்லை காவல் படையினர் அவர்கள் மீது சுட்டனர். நிலைமை மேலும் மோசமடையவே ராணுவம் அழைக்கப்பட்டது. ராணுவம் பொலிசாரை நிராயுதபாணிகளாக்கினர். போரா

சஸ்பென்ட் செய்யப்பட்டனர்.

இது ஸ்ரீநகர் பள்ளத்தாக்கில் இறுக்கத்தைத்தான் அதிகப்படுத்தியது. சூரிய அஸ்தமனத்துக்குப் பின்னர் எங்கும் பீதி நிலவுகிறது. மறைந்து கிடக்கிற பயத்தையும், வன்முறையையும் ருசி கண்டுவிட்டனர் தீவிரவாதிகள். ஆனால் எந்த ஒரு பகுதியும் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இல்லை. எல்லைக்காவல் படையினர் அடைய முடியாத தூரத்தில் எப்பகுதியுமில்லை. சோப்போரிலும், ஸ்ரீநகரிலும் இதுதான் நிலைமை. சோப்போருக்கு நான் பகல் நேரத்தில் சென்றேன். ஸ்ரீநகரில் ஐந்து இரவுகளைக் கழித்தேன்.

என்னுடைய கடைசி இரவு தங்கலன்று ஸ்ரீநகர் பகுதிகளில் இரவு ஒன்பது மணிக்கு வலம் வந்தேன். எங்கும்மயான அமைதி. தெருவில் இராணுவ வீரர் எவருமில்லை. எல்லைக் காவல் படையினர் கூடாரங்களில் பதுங்கிவிட்டனர். தீவிரவாதிகள் எங்கோ இருந்தனர். அன்றிரவு ஒன்றிரண்டு முறை துப்பாக்கி வெடிக்கும் சத்தத்தைக் கேட்டேன். ஒருநாள் மதியம் தீவிரவாதிகள் எல்லைக்காவல் படையினரின் வாகனத்தின்மீது குண்டுகளை வீசி நான்கு பேரைக் கொன்றனர். நான் தங்கியிருந்த இடத்திலிருந்து 100 கஜ தூரத்திலுள்ளபஜார்பகுதியில்இது நடந்தது. ஆனால் அரைமணி நேரத்திற்குள் சகஜ நிலை திரும்பிவிட்டது ஆண்களும், பெண்களும் பொருள்களை வாங்கிக் கொண்டிருந்தனர். இப்படித்தான்வாழவேண்டும் என்பதை மக்கள் கற்றுக் கொண்டுவிட்டனர்.

பிரபலமான இரண்டுகோவில்களைப் பார்த்தேன். அவற்றை அவர்கள் கைவைக்கவில்லை. டிசம்பர் 6ஆம்தேதி அயோத்தி சம்பவத்திற்குப் பிறகு ஏறத்தாழ 40 சிறு கோவில்கள் சிறிதளவு பாதிக்கப்பட்டன என்று அதிகாரிகள் தரப்பில் கூறப்படுகிறது. ஸ்ரீநகரிலுள்ளகோவில்களின் வெளிப்புறச் சுவர்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இவற்றைச் சில விஷமிகள் செய்துள்ளனர். ஆனால் பாபர் மசூதி கட்ட

கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தோடா என்ற இடத்தில் ஒரு ஹிந்து தலைவர் கொல்லப்பட்டதுபரபரப்பைத் தோற்றுவித்துள்ளது என்றாலும், வகுப்பு ஒற்றுமையைப் பாதிக்கவில்லை. இந்திய ஆதரவுக் கோஷங்கள் எழுதப்பட்ட உடைகளை ஜம்முவில்தான் அணிந்து செல்கிறார்கள். சந்தேகத்திற்கு இடமின்றி அவர்கள் தீவிரவாதிகளைக் கண்டனம் செய்கின்றனர்.

காஷ்மீரிலிருந்து வெளியேறிய காஷ்மீர் பண்டிட்கள் இன்னும் மோசமான நிலையில் நகரத்துக்கு வெளியே வசித்து வருகின்றனர். இவர்கள் அவ்வளவாக தீவிரவாதிகளைக் கண்டனம் செய்யவில்லை. தாங்கள் தீவிரவாதிகளால் வெளியேறவில்லை என்று அவர்கள் கூறினர். அரசு தங்களுக்குஜம்முவிலேயே ரேஷன், இருப்பிடம், வேலை இவற்றைத் தருவதாக வாக்களித்ததால்தான் அங்கிருந்து வெளியேறினோம் என்றனர். அவர்கள் தாங்கள் குடிபெயர்ந்து வந்துள்ளதாகக் கருதவில்லை. என்றாவது ஒருநாள் திரும்பிச் செல்வோம் என்று கருதுகின்றனர்.

''அவர்கள் திரும்பிச் செல்ல ஏன் உதவக் கூடாது'' என்று ஜிலானியிடம் கேட்டேன். ''அவர்கள் தம்முடைய மக்கள் தான். ஆனால், முதலில் ஏதாவது தீர்வு ஏற்படட்டும்'' என்றார். ஒப்பந்தத்தின்ஷரத்துகள் என்னவென்று நான் அவரிடம்கேட்கவில்லை. காஷ்மீர்இந்தியாவுடன்சேரவிரும்புகிறதா? பாகிஸ்தானுடன் சேர விரும்புகிறதா என்பது பற்றி வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்றதனதுஉறுதிமொழியை இந்தியா நிறைவேற்றவேண்டுமென்று அவர் சில தினங்களுக்கு முன் என்னிடம் கூறினார். இந்தியா, பாகிஸ்தான், காஷ்மீர் இவற்றிற்கிடையே ஒத்த கருத்து ஏற்பட்டால் நான் அந்த ஒப்பந்தத்துடன் ஒத்துப் போவேன் என்றார். காஷ்மீர் என்றால் முழுமையானஜம்மு-காஷ்மீர் மாநிலம் தான் என்பதை அவர் தெளிவுபடுத்தினார்.

முன்பு எப்போதையும் விட வகுப்புப் பிரிவினை இப்போது பளிச்சென்றுதெரிகின்றது. எங்களுக்கு சூபிசத்தில் நம்பிக்கை இருக்கிறது. அடியாழத்தில் நாங்கள் மதசார்பற்றவர்கள் என்றார் ஒரு பிரபலமான வக்கீல்.

ஒருநாள் அவர் சொன்னது மெய்யாகலாம். இந்தத் தருணத்தில் இந்தியா என்ன செய்ய வேண்டும்? மனிதத் தன்மையுள்ள நிர்வாகம் மக்களுடன் தனிப்பட்ட முறையில்

இவை யாவற்றிற்கும் காரணம் வடக்கு-கிழக்கில் தொடர்ந்து நிகழும் போராகும். தேசிய வருமானத்தில் ஏழு வீதத்திற்கு மேல் அதாவது, வரவு செலவு திட்டத்தில் 20 சதவீதமளவில் யுத்தத்திற்குச் செலவிடப்படுகின்றது. 2500 கோடி ரூபாவிற்கு மேற்பட்ட இச் செலவீடே பொருளாதாரத்தை பெருமளவில் பாதிப்படையச் செய்வதை அரசாங்கமும், எதிர்க்கட்சிகளும், ஏன் சிறிலங்கா பொருளாதாரத்தைக் கொண்டு நடத்தும் உலகவங்கி உட்பட உலக நிதிநிறுவனங்கள் யாவுமே ஏற்றுக்கொள்கின்றன.

ஆனால், இவற்றில் ஒன்றும் போரை நிறுத்தி பொருளாதார நெருக்கடியை தீர்க்க வேண்டும் என்பதில் அக்கறை கொண்டவையாக இல்லை. சமாதான முயற்சிகளும் ஊக்கம் வழங்குவதாகவும் இல்லை. அரசாங்க கட்சியும், எதிர்க்கட்சிகளும், அதிகாரப் போட்டியில் ஈடுபடுவதில் அக்கறையாக இருக்கின்றனவே ஒழிய, இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுதான் என்பதில்கருத்து வேறுபாடு கொண்டிருக்கவில்லை.

உதவி வழங்கும் உலக நிதி நிறுவனங்கள் போரை நிறுத்துமாறு கோருவதாக இருப்பினும் அவை ஒரு சம்பிரதாய பூர்வமான கோரிக்கையே ஒழிய நிர்ப்பந்தங்கள் அல்ல. ஏனெனில், அவை நிர்ப்பந்தங்களாக இருப்பின் அவற்றை அரசால் மீறமுடியாது போகலாம். அதாவது, பெருமளவில் வாக்காளர் மத்தியில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய இலவச வினியோகத் திட்டங்களையும், மானியத் திட்டங்களையும் கைவிடவும், அத்தியாவசியப் பொருள்களின் விலையை உயர்த்தவும் காரணமாகவுள்ள உதவி வழங்கும் நிதிநிறுவனங்களால், யுத்தத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க முடியாது ஏன் என்பது கேள்விக்குரியதொன்றே.

இந் நிலையில், சிறிலங்காவின் அதிகரித்து வரும் பொருளாதார நெருக்கடிக்கும், பொருளாதார வங்குரோத்திற்கும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மட்டுமே பொறுப்பு என்பதைவிட, பொருளாதார வங்குரோத்து ஏற்படக் காரணமான யுத்தத்தைத் தொடர்வதற்கு ஆதரவு அளித்து வரும் எதிர்க்கட்சிகளும், யுத்தத்தை நிறுத்துமாறு நிர்ப்பந்தங்களை உருவாக்காது அதிகரித்த உதவிகளைத் தொடர்ந்து வழங்கி வரும் -உதவி வழங்கும் உலகநாடுகளும், நிதி நிறுவனங்களும்காரணம் என்றே கூறலாம். யுத்தத்திற்கு ஊக்கத்தையும் உதவியையும் கொடுத்துவிட்டுஅரசாங்கம்செய்யும் யுத்தத்தில் தமக்கு பங்கில்லை எனக் கூறுவது ஏற்புடையதல்ல. நியாயத்திற்குப் புறம்பானது.

---

...னர். எல்லைக்காவல் படையினர் காலிசெய்த கட்டடத்தை முன்னிட்டும் அவர்களிடமிருந்த இரண்டு தானியங்கித் துப்பாக்கிகள் பிடுங்கப்பட்டதை முன்னிட்டும் இந்தத் தீவைப்புகள் நடந்தன.

பொது மக்களின் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்திய இதுபோன்ற சம்பவங்

செயல்பட்டு வருகின்றன. ஒன்று ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி. இன்னொன்று ஹிஸ்பி முஜாஹிதீன். முதலாவது குழு தனிநாடு கேட்பதால் இரண்டாவது குழுவை விடப் பிரபலமாக உள்ளது. இரண்டாவது குழுவான முஜாஹிதீன் பாகிஸ்தான் சார்புடையது. பாகிஸ்தானின் துப்பாக்கிகள் இவர்

ராணுவம் அழைக்கப்பட்டது. ராணுவம் பொலிசாரை நிராயுதபாணிகளாக்கினர் போராட்டக்காரர்களின் தலைமையகத்தை எந்தவித எதிர்ப்புமில்லாமல் காலி செய்தனர். 80 பொலிசார் டிஸ்மிஸ் செய்யப்பட்டனர். கலகத்துக்குப் பிறகு இரண்டு அதிகாரிகள்

...ளாகியுள்ளன. இவற்றைச் சில விஷமிகள் செய்துள்ளனர். ஆனால் பாபர் மசூதி கட்டடத்தை ஒரு வெறிபிடித்த கும்பல் இடித்தது.

திரும்பும்போது கோவில் நகரமான ஜம்மு வழியே வந்தேன். ஸ்ரீநகருக்கு நேர்மாறாக ஜம்மு அமைதியாக இருந்தது. இங்கிருந்து 100

செய்ய வேண்டும்? மனிதத் தன்மையுள்ள நிர்வாகம் மக்களுடன் தனிப்பட்ட முறையில் தொடர்பு. அத்துமீறல்களை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவது போன்றவை நீண்ட கால நோக்கில் பயன் தரலாம். தற்போது காஷ்மீர் நம்மிடம் தக்க வைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் நிர்வகிக்கப்படவில்லை.

---

## கரும்புலிகள்

எனது நெஞ்சு புல்லரிக்கும்.

கரும்புலி வீரர்கள் பற்றி இன்று முழு உலகமும் பேசுகிறது. அவர்களது மகத்தான தியாகத்தைக் கண்டு மலைத்துப்போய் நிற்கிறது. பூகம்ப அதிர்வாகக் குமுறும் எமது போராட்டத்தின் உக்கிரத்தை உலக சமுதாயத்திற்கு உணர்த்தியவர்கள் கரும்புலிகளே.

அன்றொரு காலம் அமைதி வழியில் உரிமை கேட்டு ஆர்ப்பரித்த தமிழினத்தை அடக்குமுறையாளனின் இரும்புக்கரங்கள் நசுக்கி விட்டன. இன்று, நீதி கேட்டு நெருப்பாக எரியும் தமிழரின் ஆவேச எழுச்சியை எந்த சக்திகளாலும் நசுக்கிவிட முடியாது.

இது கரும்புலிகளின் சகாப்தம்.

இடியும் மின்னலுமாகப் புலிகள் போர்க்கோலம் கொண்டு விட்ட காலம்.

இந்தப் புதிய யுகத்தில் எமது போராட்டம் புதிய பரிமாணங்களில் விரியும். சாவுக்கு விலங்கிட்ட மறவர்கள் புதிய சரித்திரம் படைப்பார்கள். எமது சந்ததியின் விடிவுக்கு விளக்கேற்றி வைப்பார்கள்.

கரும்புலிகளின் புனித தினமாகிய இன்றைய நாளில், வரைபடாத சித்திரங்களாகவும், எழுதப்படாத சரித்திரங்களாகவும், எமது வாழ்வுக்காக தமது வாழ்வைத் துறந்த அந்த அற்புதமான தியாகிகளை எமது நெஞ்சில் நிறுத்திப் பூசிப்போமாக.

## போட்டி

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் வலைப்பந்து மாவட்ட நிலைப் போட்டிகள் நாளை ஆரம்பமாகின்றன.

மேற்படி போட்டியில் 17, 19 வயதுப் பிரிவுகளில் முதல் இடங்களைப்பெற்ற அணிகள் மோதுகின்றன.

இப் போட்டிகளில் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றுபவர்களுக்கான கருத்தரங்கு நாளை காலை 8-30 மணிக்கு யாழ். கல்வித் திணைக்கள முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

## 3 கடற்படை

கிறது.

கடற்படை படகுகள் மீது சில வேட்டுகள் பாய்ந்ததாகவும் அதிகாரி ஒருவர் கூறினார்.

## ஆனையிறவு

ஆனையிறவை தாக்குவதற்காக விடுதலைப்புலிகள் தமது போராளிகளை வல்வெட்டித்துறையில் இருந்தும் நாவற்குழியிலிருந்தும் நகர்த்தி நல்லூர் கோவில் பகுதியிலும் யாழ். நகரப் பகுதியிலும் நிறுத்தியுள்ளதாக ஐலண்ட் பத்திரிகை கூறுகிறது.

ஆனையிறவிலுள்ள படையினர் எந்தவிதமான தாக்குதலையும் சமாளிக்கும் வகையில் உள்ளதாகவும் தமது முன்னணி நிலைகளிலிருந்து முன்னேறிச் செல்ல திட்டமிட்டுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியதாகவும் ஐலண்ட் மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

## புலிகளுக்கு

பெற்றோரும், கடற் கரும்புலி கப்டன்கொலின்சினது உருவப்படத்திற்குயாழ்.மாவட்டசிறப்புத் தளபதி திரு.செ வராசாவும். லெப். கேணல் போர்க் உருவப்படத்திற்கு தமிழீழ மகளிர் பிரிவு அரசியல்றுறை பொறுப்பாளர் செல்வி ரதியும் மேஜர் டாம்போ உருவப்படத்திற்கு தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் திரு. நடேசன் அவர்களும் கடற்கரும்புலி கப்டன் சிதம்பரத்தின்உருவப்படத்திற்கு அவரதுதந்தையும்கடற்கரும்புலி கப்டன் ஜெயந்தன் உருவப்படத்திற்குவடமராட்சி தளபதி திரு அருணா அவர்களும் மலர்மாலை அணிவித்து ஈகைச்சுடர் ஏற்றி திரை நீக்கம் செய்துவைத்தனர். கரும்புலிகள் நினைவாக புகைக்கூடுகளும் வானத்தில் விடப்பட்டன. அதனைத் தொடர்ந்து 8.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் பொதுக்கூட்டம்ஆரம்பமானது.

இதே சமயம் சிறிலங்கா அரசுக்கு சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று வடமராட்சிப் பகுதியை பலதடவைகள் வட்டமிட்டுநோட்டமிட்டது.

## தென்மராட்சி

தென்மராட்சிக் கோட்டத்தில் யா/மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தில் தென்மராட்சி அரசியல்துறை பொறுப்பாளர் திரு. கந்தண்ணா தலைமையில் பொதுக்கூட்டம் இடம் பெற்றது.

முதலில் 2 நிமிட மௌன அஞ்சலியுடன் ஆரம்பமாகிய நிகழ்வில்மாவீரருடைய ஈகைச்சுடரை தென்மராட்சி உதவித் தளபதி திரு. சங்கர் ஏற்றி வைத்தார். உருவப்படங்களுக்கு மாலைகளை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன்தியாகம் அணிவித்தார். அதனைத் தொடர்ந்து அஞ்சலிக்கூட்டம் இடம்பெற்றது. இதில் திரு யோகரட்ணம் யோகி, திரு. தேவர், யாழ்- மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி, தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு, பொன்தியாகம், ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். இதனைத் தொடர்ந்து வலிகாமகோட்ட கலை பண்பாட்டுக்கழகத்தின் கலை நிகழ்ச்சிகளும் கரும்புலிகளின் நினைவாக யாழ். மாவட்டக் கலை, பண்பாட்டுக்கழகத்தினரின் வீடியோபட நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

இதே வேளை நேற்றுக் காலை 7-30 மணியளவில் தென்மராட்சி பகுதியில் மீசாலை ஐயா கடைச் சந்தியில் கரும்புலிகளின் உருவப்படம் புதிதாக திரைநீக்கம் செய்யப்பட்டது.

இந் நிகழ்வு தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. கந்தண்ணா தலைமையில் இடம்பெற்றது. இவ் உருவப்படங்களை மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. கணேசண்ணா அவர்கள்திரைநீக்கம் செய்துவைத்தார். ஈகைச்சுடரை தென்மராட்சி உதவி தளபதி சங்கர் ஏற்றி வைத்தார். தேசியக் கொடியை தென்மராட்சி விசேடதளபதி குணா அவர்கள் ஏற்றி வைத்தார்.

## வலிகாமம்:

வலிகாமப் பகுதியில் மானிப்பாய் மாவீரர் கலை அரங்கத்திற்குச் செல்லும் வீதியெங்கும் வர்ணமின் விளக்குகள் எரியவிடப்பட்டன.

தமிழீழ காவல்துறையினர் பொது மக்களின் போக்குவரத்தை கண்காணித்து சன நெருக்கடியை தவிர்க்க உதவினர்.

மானிப்பாய் மாவீரர் கலை அரங்கம் பகுதியில் பொதுக் கூட்டத்திற்கு முன்னர். யாழ். அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி அவர்களினால் கரும்புலிகளின் உருவப்படங்களுக்கு முன்னால் ஈகைக் சுடர் ஏற்றப்பட்டது. இதனை அடுத்து கரும்புலிகளின் உருப்படங்களுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

பொதுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் உறுப்பினர் உரையாற்றினர். (86), (நி

## முத்தமிழ் விழா

யாழ். புனித மரியாள் வித்தியாலய முத்தமிழ் விழா நாளை (புதன்) பி.ப. 1.30 மணிக்கு வித்தியாலய முத்தமிழ் அரங்கில் நடைபெறவுள்ளது.

★

யாழ். புனித றோக் றோ.க. வித்தியாலய முத்தமிழ் விழாவும், மாணவர் திறன் நயப்பு விழாவும் இன்று மு.ப. 9.30 மணியளவில் மேற்படி வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# பூநகரி பாதை விவகாரம்; கைதிகள் விடுதலை

# புலிகளின் நிலைப்பாடு என்ன?

## அன்ரன் பாலசிங்கம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் தினத்தையொட்டி நேற்று நெல்லியடியில் நடைபெற்ற எழுச்சிக் கூட்டத்தில் போர் கைதிகள் விவகாரம், பூநகரி பாதை விவகாரம் என்பவை தொடர்பாகவும் இன்றைய அரசியல் நிலை தொடர்பாகவும் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நீண்டதோர் விளக்கவுரையை ஆற்றினார்.

அதன் விபரம் வருமாறு:

இன்று என்ன நடக்கிறது. பௌத்த குருமார் வருகிறார்கள், கிறிஸ்தவ சுவாமிமார் வருகிறார்கள், ஆயர்மார் வருகிறார்கள், பிரிகேடியர் வீரசேகரா வருகிறார் விடுதலைப் புலிகளுடன் தொடர்ச்சியாகப் பேசுகிறார்கள். ஆனால் ஒன்றையும் காணவில்லை. சமாதானமும் வரவில்லை, சமாதானமும் வந்திறங்கவில்லை. அப்படியென்றால் என்ன பேச்சு நடக்கிறது? இது மக்கள் கேட்கும் கேள்வி அப்படியென்றால் உண்மையில் என்ன நடைபெற்றது என்று பார்ப்போம்.

உங்களுக்கு நன்றாகத் தெரியும் சமாதான முயற்சிக்காக புலிகளுடன் பேசுவதற்கு இங்கு யார் யார் வருகிறார்கள் அரசியல் வாதிகள் வருகிறார்களா? இல்லை. சிங்கள ஆட்சிபீடத்தில் உள்ளவர்கள் வருகிறார்களா? இல்லை. யார் வருகிறார்கள் என்றால் துறவிகள் தான் வருகிறார்கள். வாழ்க்கையைத் துறந்தவர்களான பிக்குமார், ஆயர்மார் வருகிறார்கள். இவர்களுக்கு அதிகாரம் இல்லை. இவர்களுக்கு அரசாங்கத்துக்கு அழுத்தம் போடும் ஆளுமை இல்லை. ஆனால் அவர்கள் தான் வருகிறார்கள். நாங்களும் சமாதானக் கதவுகளைத் திறந்துவைத்துக் கொண்டு எல்லோரையும் வரவேற்கிறோம். அவர்களுடன் பேசுகிறோம். ஆனால் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் சமாதானம். பேச்சுவார்த்தை வேண்டும் என்கிறார்கள். நாங்கள் அவர்களிடம் திருப்பித் திருப்பி ஒன்றைத் தான் சொல்லுகின்றோம்.

### சமாதானத்திற்கு புலிகள் தயார்

பிரச்சினைக்குஒரு தீர்வு வேண்டும். இதைத்தான் மக்கள் அனைவரும்விரும்புகிறார்கள். இந்த சமாதானத்தைப் பற்றி நீங்கள் எங்களுக்கு போதனை செய்ய வேண்டாம்.

நாம் ஒன்றையே திருப்பித் திருப்பிச் சொல்கின்றோம். தலைவர் பிரபாகரன் உட்பட விடுதலைப் புலிகளின் பல மட்டங்களிலும் திருப்பித் திருப்பி எது சொல்லப்படுகிறது என்று சொன்னால் சமாதானக் கதவுகள் திறந்திருக்கிறது. சமாதானத்துக்கு நாங்கள் தயார். போர் நிறுத்தத்திற்கு நாங்கள் தயார் பேச்சுவார்த்தைக்கும் நாங்கள் தயார். ஆனால் சிங்கள அரசாங்கம் அதை செவிமடுக்கவில்லை. இதையெல்லாம் நாங்கள் இங்கு வந்த ஆயர்மார்களிடம் சொன்னோம். இது தான் பிரச்சினை இதை அங்கு போய் கூறுங்கள் அங்கு போனீர்களாயின் உங்களை அரசியல் தலைவர்கள் கூட்டிச்சென்று பேசவேண்டும். உங்களுக்குமதிப்பளித்து. இங்கு தலைவர் பிரபாகரன் உங்களை சந்தித்துள்ளார். நீண்ட காலத்தின் பின் ஆயர்மார்களை சந்தித்து விடயத்தை கூறியுள்ளார்.

### இராணுவத்தின் சந்தேகம்

ஆனால் அவர்களுக்கு அங்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. அங்கு என்ன பிரச்சினை? அதாவது புலிகள் ஏன் சமாதானத்தை விரும்புகின்றனர் என இராணுவம் கேட்கிறது புலிகள் பேச்சுகளுக்கு தயார் என்பது உண்மையா? புலிகள் பேச்சு என்று கூறி புதிய இராஜதந்திர நகர்த்தலை செய்ய விரும்புகிறார்களா அல்லது புலிகள் பேச்சு என்றும் போர் நிறுத்தம் என்றும் கூறி தம்மை தயார்படுத்துகிறார்களா என்ற சந்தேகங்களை அரசு அங்கு எழுப்பி விட்டுள்ளது.

சமீபத்தில் சர்வதேச மதக் குழு ஒன்று வந்தது அவர்களுடன் நாம் பேசினோம். நாம் சமாதானத்திற்கு தயார் என்றதும் அவர்கள் கேட்கிறார்கள் என்னவெனில் நீங்கள் சமாதானம் செய்துவிட்டு உங்களை தயார்படுத்தி நீங்கள் பலமாவதற்கு முயற்சிப்பகளை பலப்படுத்த முடியும். ஏனெனில் நாம் எதிரிகளின் ஆயுதத்தைப் பறித்தெடுத்தே எம்மை பலப்படுத்த முடியும். அப்போ நாம் போராட்டத்தை நிறுத்தி சமாதான சூழ்நிலையை உருவாக்கினல் எமக்கு ஆயுதங்கள் வராதே. நாம் ஏன் சமாதானத்தை விரும்புகின்றோம் என்றால் எம் மக்கள் சமாதானத்தை விரும்புகின்றனர். மக்களுக்கு ஓய்வு வேண்டும். நீண்டகாலமாக முடிவில்லாமல் ஒரு பெரும் யுத்தம் ஒன்றை சந்தித்து மக்கள் நிற்கின்றனர். ஏகப்பட்ட சமூக பொருளாதார பிச்சினைகள் உள்ளன.

### மக்களையே பாதிக்கிறது

எமக்கு எல்லாம் தெரியும் நீங்கள் நேரடியாக புலிகளுடன் மோதுவதையோ யுத்தம் புரிவதையோ நீங்கள் தவிர்க்கின்றீர்கள் நீங்கள் தண்டிப்பது எல்லாம்எமது மக்களைத்தான். அப்பாவிகளை ஏன் தண்டிக்கின்றீர்கள் ஏன் யாழ்ப்பாணதை முற்றுகையிட்டுள்ளீர்கள். பொருளாதாரத்தடையை போட்டுள்ளீர்கள்எதற்கு? யாருக்கு எதிராக? மக்களுக்கு எதிரகவ ? புலிகளுக்கு எதிராகவா? புலிகளின் நடமாட்டம் எந்தவகையிலும் பாதிக்கவில்லை. எமது வாகனம் ஓடுகிறது. நாம் கடலால் செல்கிறோம். யார் பாதிக்கப்பட்டது? சாதாரண மக்களே பாதிக்கப்படுகின்றனர். இது சிங்கள மக்களுக்குத் தெரியாது. ஏன் இந்த சிங்களவர்கள் தமிழரின் குரல்வளையை நசிக்கின்றனர். ஒரே ஒரு காரணத்திற்காக அதாவது தமிழரின் மன உறுதியை உடைப்பதற்காக யாழ்ப்பாணம் புலிகளின் குகை, போராட்டத்தின் மையப்பூமி இந்த மண்ணை அழிக்கவேண்டும், யாழ்ப்பாணத்தானை தண்டிக்கவேண்டும் இதற்காக கடந்த மூன்று ஆண்டுகளாக எமது மக்களுக்கு எதிராகவே போர் செய்கிறீர்கள் எமக்கு எதிராக இல்லை புலிகளுடன் நேரடியாக மோத துணிவில்லை இதுவெல்லாம் ஆயர்களிடம் கூறினோம். இங்கு வந்து மக்களுக்கு சமாதானத்தைப பற்றி கூறாதீர்கள். எமது மக்கள் உணர்வுபூர்வவைச் சங்கம் அங்கு பார்ப்பதில்லை. சிங்களக் கைதிகள் உண்ணாவிரதம் ஆரம்பித்ததும் பெற்றோர்கள் இங்குவர அனுமதி கேட்டிருந்தனர் அனுமதித்தோம். இந்த விவகாரம் உலகிற்கு அம்பலமானதும் சிங்கள அரசு கிடுகிடுத்தது. அதன்பின்னரே பிரிகேடியர் வீரசேகர வந்தார் தான் கைதிகளை கூட்டிச்செல்ல வந்ததாக அவர் கூறினார். நான் கூறினேன் அதற்காக உங்களை அழைக்கவில்லை கைதிகள் விவகாரம் பற்றி கதைக்கவே அழைத்தோம். பெரிய சண்டைகளில் காணாமற்போனகாயப்பட்ட போராளிகள் கைதாகியிருக்கலாம் இவர்கள் எத்தனைபேர் என்றே எமக்கு தெரியாது. எனவே நீங்கள் கைதான புலிகளின் பட்டியலை தாருங்கள் என்று கோரினோம். அதன் பின் நாம் கைதிகளை பரிமாறுவோம். அதற்கு சிங்கள அரசு தயாரில்லை என வீரசேகர கூறினார். ஏன் புலிகளின் பட்டியலை தர அரசு துணியவில்லை ஏனெனில் அது பாதுகாப்பு இரகசியங்களாம் என்றார் பிரிகேடியர்.

போர்க்கைதிகளை பரிமாறுவது சர்வதேச நியமம் சிங்கள அரசுக்கு அது விளங்கவில்லை. இதன் பின் நாம் ஒரு கோரிக்கையை விட்டோம். புலிகளை விடுங்கள் பொதுமக்களுக்காக ஏதும் செய்யுங்கள் என்று நாம் கூறினோம். மக்கள் மிகப் பெரும் துன்பங்களை சுமக்கின்றனர். பொருளாதார தடையை தளர்த்துங்கள் என்று கேட்டோம். இதை ஏற்று சில பொருள்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. பொருவகள் வரும் கைதிகளை என்னிடம் ஒப்படையுங்கள் என்று பிரிகேடியர் கொழும்பிலிருந்து திரும்பிவந்து எம்மிடம் கூறினார். இதற்கு நாம் மறுத்துவிட்டோம். காலம்காலமாக தமிழர்ஏமாற்றப்பட்டு வந்துள்ளனர் என்று கூறினோம் இருந்தும் பொருளாதாரத் தடை நீக்க அறிவிப்பிற்கு நல்லெண்ண சமிக்கையாக ஐந்து கைதிகளை விடுவித்தோம்.

### நாம் ஏமாற தயாராயில்லை

அரச தரப்பின் நல்லெண்ணத்திற்காக ஒரு மாதத்திற்கு தேவையான பொருள்களை அனுப்புமாறு நாம் கேட் எம்மை ஏமாற்ற முனைந்தது நாம் ஏமாறத் தயாரில்லை.

சிங்கள அரசு கைதிகளோ அவர்களது உறவினர்களோ போனாலும் சரி தமிழருக்கு பொருள்கள் செல்லக்கூடாது என்று உறுதியாக உள்ளது இராணுவ அழுத்தமே இதற்கு காரணம் பலவீனமான அரசு அங்குள்ளது. அடுத்த வருட தேர்தலையே அவர்கள் எண்ணுகின்றனர். அதுவரை எப்பிரச்சனைக்கும் துணிந்து முடிவெடுக்கும் நிலையில் அரசு இல்லை. புலிகளுடன் பேசினால், பொருளாதாரத் தடையை நீக்கினால் வாக்குகள் கிடைக்காது என்று அவர்களுக்கு அச்சம். தமிழருக்கு எதிரானதாக காட்டிகொள்ள அவர்கள் விரும்புகின்றனர்.

### கழுத்தை நெரிக்கும் செயல்

ஆனையிறவை சுற்றி 8 மைல் நீள இராணுவவேலி அமைக்கப்பட்டுள்ளது. மறுபுறம் பூநகரி பகுதியில் பல மைல்கள் நீள முட்கம்பிகளால் அடைக்கப்பட வேலிகள் இப்பகுதிகளில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். இவை யாழ்ப்பாணத்தின் கழுத்தை நெரிக்கின்ற ஒரு செயல. ஏன் இவ்வாறு நெரிக்கிறீர்கள் என்றால் அது புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளாம்.

எங்களுக்கு ஆயிரம் பாதைகள் இருககிறது கடலாலே போவோம் கடல்நீரேரியால் போவோம் கிளாலியால் போவோம் இவ்வாறு பலவழிகளால் நாங்கள் போவோம. யாருக்கு தடைபோட்டு வைத்திருக்கிறீகள். எங்கள் மக்களுக்குத்தான் இவ்வாறுதடைபோட்டு வைத்துள்ளீர்கள்.

எங்கள் மக்களை நாங்கள் கொண்டு போவோம். பொதுமக்களை பாதுகாப்பாக நாங்கள் கொண்டு போவதற்காகத்தான் ஒவ்வொரு நாளும் கடற்புலிகள் சிங்களக் கடற்படையுடன் போரிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

### ஐ. நா. பிரதிநிதிகள் வந்தனர்

இந்த சூழ் நிலையில் தான் ஒருநாள் ஐ நா. தூதரகப் பிரதிநிதிகள் வந்து தாங்கள் ஒருபாதையைத் திறந்து விடுகிறோம் உங்கள் மக்கள் பூநகரிப்பாதையில் நின்று கண்காணிக்கப்போகிறீர்கள் அந்த நேரத்திலே மக்கள் போக்குவரத்து செய்யும் போது இராணுவம் சோதனையிடக்கூடாது. ஏனெனில் அதில் எந்தவித நியாயமும் இல்லை. வவுனியாவில் இராணுவ சோதனை நடக்கிறதுஆனால் அது அவர்களின் எல்லை. அதற்கு அப்பால் சிங்கள தேசம் இருக்கிறது அதனால் அங்கு இராணுவம் சோதனையிடுகிறது அதற்கு நாம் எதுவித ஆட்சேபனையையும் தெரிவிக்கமுடியாது.

### சோதனையிட அனுமதிக்கமுடியாது

ஆனால் பூநகரி எங்கள்மண். அதற்குள் சிறிலங்கா இராணுவம் வந்து இருந்து கொண்டு பளையிலிருந்து கிளிநொச்சி செல்லும் ஒருவரை பிடித்து வைத்துக் கொண்டுசோதனை செய்வதானால் அது என்ன நியாயம். அப்படியான ஒரு இராணுவம் சோதனையிடுவதை நாம்அனுமதிப்பதாயின் ஐ. நாவை ஏன் நாம் இங்கு அழைக்க வேண்டும். ஐ. நா. இங்கு வருவதென்றால் இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கை இங்கு நடக்கக் கூடாது. இராணுவம் வந்து எங்கள் மக்களைச் சோதனையிடக்கூடாது. ஐ. நா. பார்த்துக் கொண்டிருக்க அதனூடாக எங்கள் மக்கள் போய்வர வேண்டும். இதையே நாம் கேட்டுக் கொண்டோம்.

இதற்கு இராணுவம் என்ன கூறுகின்றதெனில தாம் அங்கு நிறபார்களாம். செல்லும் மக்களை தாம் சோதனையிடுவார்களாம். கொண்டு செல்லப்படும் பொருள்கள் அனைத்தும்தம்மால் சோதனையிடப்படுமாம். மக்கள் தடைசெய்யப்பட்ட பொருள்களை கொண்டு சென்றால் தம்மால் கைது செய்யப்படுவார்களாம்.

அப்போ இங்கு வந்த ஐ நாவிடம் நாம் கூறினோம. நீங்கள் இப்படி வந்து நிற்பதானால் இராணுவத்தினரின் இத்தகைய அநியாயமநடக்கக்கூடாதுஎன்றுஐ.நாஎம்மிடம் ஓர் ஒப்பந்தத்தைத் தந்துள்ளது. அதில் சில விதிகள் உள்ளன. இவை பற்றி நாம் ஆராய்ந்து வருகிறோம். இந்த விதிகளின் பிரகாரம் இராணுவம் அங்கு நிற்கும். அதனூடாக செல்லும் மக்கள் சோதனையிடப்படுவார்கள். சிலர் கைது செய்யப்படலாம். அதில் ஒரு விதிவருகிறதுஎன்னவென்றால் இராணுவம் யாரை தகுதியற்றவர் எனக்கருதுகிறதோ அவரை திருப்பி அனுப்புமாம் இதில் ஒருவர் தகுதி அற்றவர் முதல் செய்யப்பட்டாலோ நாங்கள் அங்கு பொறுப்பு ஏற்கமுடியாது. அப்படி எவ்வாறுகூறுவீர்கள்? அப்படியானால் யார் பொறுப்பேற்பது? நாம் பூநகரியால் போகும் போது இராணுவம் வந்து எம்மை அடித்து உதைக்கும் போது ஐ. நா. மறுபுறம் பார்த்துநின்றால் எம்மை யார் பார்ப்பது? ஆகவே இந்த ஒப்பந்தம் இராணுவத்திற்கு எவ்வளவு சாதகமாக அமைந்திருக்கிறது என்பதைப் பற்றி நாம் பகிரங்கமாக அறிவிக்கவுள்ளோம்.ஏனென்றால் இனியும் நாம் இவற்றை மூடிமறைத்து வைக்கமுடியாது' உண்மை நிலைமையை மக்களுக்கு நாம சொலவோம்.

### ராணுவம் சோதனையிடும்

நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள். ஏதோ ஐ நா. வந்து அந்த பூநகரியில் நின்று கொண்டு உங்களைப் பக்குவமாக அனுப்பி வைக்கப்போகிறதென்று. அப்படி இல்லை. அங்கு இராணுவம் சோதனை செய்யும். இந்த இராணுவ சோதனையை நீக்குவதமாகத்தான் இந்த இராணுவச் சாவடி அங்கு இருக்கக் கூடாதென்றுதான் எமது மக்கள் எமது மண்ணில் அந்நிய இராணுவத்தால் சோதனையிடப்படக் கூடாது என்பதற்காகத்தான் நாம் நீண்டகாலமாக போரிடுகிறோம். ஆனால் இராணுவம் விட்டுக் கொடுப்பதாக இல்லை. இதை நீங்கள் சிந்திக்க வேண்டும். இது ஒரு முக்கிய விடயம்.

இப்போது எமக்கு நன்றாக தெரியும் ஜனாதிபதி தேர்தல் வருகிறது பாராளுமன்ற தேர்தல் வருகிறது. இந்தக் கால இடைவெளிக்குள் அரசு எதையுமே உருப்படியாக செய்ய முடியாது. இதற்கு இடையில் இராணுவத்தின் பலம் தான் அங்கிருக்கிறது இது தமிழரின இனப்பிரச்சினை யில்லாமல் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் மத்தியில் உள்ள ஒரு மோதல் நிலையாகப்பார்க்கப் படும்.

டி. பி, விஜயதுங்கா சொல்கிறார் இங்கு இருப்பது இனப்பிரச்சினையல்ல. இங்கு இருப்பது பயங்கரவாத பிரச்சினை தான் என்று. இவர் அறுபது வயதுவரை இருந்து அரசியல் படித்து என்னத்தை விளங்கி வைத்துள்ளாரோஎன்று எனக்குத் தெரியவில்லை.

நாங்கள் எங்கள் நிலைப்பாட்டைச் சொல்கிறோம். ஏனென்றால் சர்வதேச உலகத்திற்கு புலிகள் சமாதானத்தை விரும்புகிறார்கள் பேச்சைவிரும்புகிறார்கள். நீதியை

றால் சமாதானம் பேச்சுவார்த்தை வேண்டும் என்கிறார்கள். நாங்கள் அவர்களிடம் திருப்பித் திருப்பி ஒன்றைத் தான் சொல்லுகின்றோம்.

### சமாதானத்திற்கு புலிகள் தயார்

இங்கே உள்ள மக்கள் சமாதானத்தைத் தான் விரும்பி நிற்கிறார்கள். யாருக்கு சமாதானத்தில் விருப்பமில்லை? முடிவில்லாமல் யுத்தம் தொடர்கிறது. இந்தப்

குழு ஒன்று வந்தது அவர்களுடன் நாம் பேசினோம். நாம் சமாதானத்திற்கு தயார் என்றதும் அவர்கள் கேட்கிறார்கள் என்னவெனில் நீங்கள் சமாதானம் செய்துவிட்டு உங்களை தயார்படுத்தி நீங்கள் பலமாவதற்கு முயற்சிப்பதாக இராணுவ தலைமைப் பீடம் நினைக்கிறது என்று. அப்போ நான் அந்த ஆயரிடம் சொன்னேன். போராட்டம் மூலமும், இராணுவ நடவடிக்கை மூலமுமே நாம் எங்

போர் செய்கிறீர்கள் எமக்கு எதிராக இல்லை புலிகளுடன் நேரடியாக போத துணிவில்லை இதுவெல்லாம் ஆயர்களிடம் கூறினோம். இங்கு வந்து மக்களுக்கு சமாதானத்தைப பற்றி கூறாதீர்கள். எமது மக்கள் உணர்வுபூர்வமாக சமாதானத்தை விரும்புகின்றனர் அதேசமயம் நீதியையும், நியாயத்தையும் கேட்கின்றனர். இதுதான் நாம் அவர்களிடம் கூறியது வேறு எதை அவர்களுக்கு சொல்வது,

அடுத்ததாக கைதிகள் விவகாரம் தமிழர்மீது சிங்கள அரசுக்குள்ள அன்பு. அக்கறை எப்படி என்பதை எடுத்துக் காட்ட நல்ல உதாரணம். கடந்த மூன்று வருடமாக எம் பாதுகாப்பிலிருந்த சிங்களக் கைதிகள் உண்ணாவிரதம் இருக்க விரும்பினர். அதற்கு அனுமதி கேட்டனர் நாம் அனுமதித்தோம். கைதிகளுக்கு நாம் அளித்த வசதிகளை சர்வவேச செஞ்சிலுவைச்சங்கம் சென்று பார்த்தது. ஆனால் எம் இளைஞர்களின் நிலை என்ன ஒருவருக்குமே தெரியாது. செஞ்சிலு

அறிவிப்பிறகு நல்லெண்ணசமிக்கையாக ஐந்து கைதிகளை விடுவித்தோம்.

### நாம் ஏமாற தயாராயில்லை

அரச தரப்பின் நல்லெண்ணத்திற்காக ஒரு மாதத்திற்கு தேவையான பொருள்களை அனுப்புமாறு நாம் கேட்டோம். ஏற்றுக்கொண்டு பிரிகேடியர் சென்றார். அந்த ஒரு அறிக்கையில் புலிகள் புதிய நிபந்தனையிடுவதாக அவர் கூறினார். நாம் புதிய நிபந்தனை போடவில்லை. உண்மையில் நடந்தது பொருள்களை கப்பல் மூலம் அனுப்புவதை இராணுவத் தலைமை விரும்பவில்லை. எதிர்க்குரல் எழுப்பியது இராணுவம். டீசல், தீப்பெட்டி, பெற்றோல் புலிகளுக்கு செல்வதாகவும் தீப்பெட்டி மருந்தை எடுத்து புலிகள் குண்டு செய்து எமக்கு வீசப் போகின்றனர் என்றும் இராணுவம் ஆட்சேபனை எழுப்பியது இதனால் அரசுக்கும் இராணுவத்திற்கும் முரண்பாடு ஏற்பட்டது. கதையை மாற்றி எம்மீது பழியை போட்டு வீரசேகரா திரும்பி விட்டார் இதன்மூலம் அரசு

...கொண்டிருக்கிறார்கள்.

### ஐ. நா. பிரதிநிதிகள் வந்தனர்

இந்த சூழ்நிலையில் தான் ஒருநாள் ஐ நா. தூதரகப் பிரதிநிதிகள் வந்து தாங்கள் ஒருபாதையைத் திறந்து விடுகிறோம் உங்கள் மக்கள் பாதுகாப்பாக போவதற்கு ஓர் ஒழுங்குகளைச் செய்து விடுகிறோம் என்றனர்.

அப்போது நாம் நினைத்தோம் இது ஒரு நல்ல விடயம் ஐ. நா வருகிறது சர்வதேச நிறுவனம் ஒன்று வருகிறது வந்து பூநகரி பாதையை கண்காணிக்க போகிறது. எங்கள் மக்கள் நிம்மதியாகப் போய்வரலாம். ஆனால் எங்களுக்குத் தெரியும் ஆயுதம் தாங்கிய புலிகள் மட்டும் பூநகரிப்பாதையால் போய்வர முடியாது. பொதுமக்கள் போகலாம் சரி நாங்கள் அப்பாதையால் போகவில்லை பொதுமக்களை யாவது விடுங்கள் என ஐ. நா. அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறினோம். அத்துடன் இது தொடர்பாக நாம் ஒரு ஆலோசனை வழங்கினோம நீங்கள் ஓர் சர்வதேச நிறுவனம் நீங்கள் பூந

...செல்லும் மக்கள் சோதனையிடப்படுவார்கள். சிலர் கைது செய்யப்படலாம். அதில் ஒரு விதிவருகிறதுஎன்னவென்றால் இராணுவம் யாரை தகுதியற்றவர் எனக் கருதுகிறதோ அவரை திருப்பி அனுபபுமாம் இதில் ஒருவர் தகுதி அற்றவர் என எந்த அடிப்படையில் ஒரு மனிதனை திருப்பி அனுப்புவது. அதில் விளக்கம்ஒனறும் இல்லை. வவுனியாவை போன்று தேசவிரோதக் குழுக்களை இராணுவ சீருடை தரித்து அங்கு நிறுத்திவிடலாம். இந்த யாழ்ப்பாணத்து மக்களில் பெரும்பாலானவர்கள் புலிகளின் ஆதரவாளர்கள். பதினையாயிரம போராளிகளின் பெற்றோர்கள் இருக்கின்றார்கள். ஐயாயிரம் மாவீரர்கள் குடும்பங்கள் இருக்கின்றன. ஆயிரமாயிரம மக்கள் புலிகளாக மாறியிருக்கின்றனர். இவர்கள் பூநகரிப்பாதையூடாக செல்லும்போது இராணுவம் அவர்களை அழைத்துக் கைது செய்யலாம். இங்கு ஐ. நா. மன்றத்திற்கு இது தொடர்பாக ஒரு விதியுண்டு. அதாவது இந்தப் பூநகரிப் பாதையால் போக்குவரத்து செய்பவர்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் அவர்கள் கைதுசெய்யப்பட்டாலோ அவர்களது பொருள்கள் பறி

...படித்து என்னத்தை விளங்கி வைத்துள்ளாரோஎன்று எனக்குத் தெரியவில்லை.

நாங்கள் எங்கள் நிலைப்பாட்டைச் சொல்கிறோம். ஏனென்றால் சர்வதேச உலகத்திற்கு புலிகள் சமாதானத்தை விரும்புகிறார்கள்.பேச்சைவிரும்புகிறார்கள். நீதியை விரும்புகிறார்கள் என்பதை நாம் சொல்லிக் கொண்டே இருப்போம். இந்தக் கைதிகளை நாங்கள்விடத்தயாராக இருக்கிறோம் ஆனால் எமது மக்களின் இந்தத துன்பங்கள் நீங்க வேண்டும் சும்மா நாங்கள் சிங்களவர்களை நம்பி கைதிகளை விடமுடியாது நாம் ஏமாறத் தயாராக இல்லை. இப்படியாகச் சிங்கள அரசு பயந்து தமிழ் மக்களை அன்னிய மாக்கிதமிழ்மக்களின் பொருளாதார வளத்தைச் சீர் குலைத்து தமிழ் மக்களின் போக்குவரத்தை தடை செய்து தொடர்ச்சியாக இந்த நடவடிக்கைகளை செய்து கொண்டு போகுமானால் ஒருவிடயம் தெளிவாக தெரியும். அதாவது தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒன்று சேர்ந்து வாழ முடியாது நாம் ஒரு தனி அரசு அமைத்தால் தான் எமது பொருளாதார வாழ்வை மேம்

( 2 ஆம் பக்கம் பார்க்க )

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 05-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10220

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 24-6211, | 24-7044, | 41-9579, | 24-5886, | 24-9856 |
| 28-1110, | 22-5812, | 24-1685, | 24-5496, | 27-8515 |
| 27-9492, | 26-1609, | 43-4170, | 22 9005, | 42-6452 |
| 28-3735, | 26-2654, | 26-6335. | 26-2786, | 24-5676 |
| 26-3473, | 27-0113, | 24-0422, | 28-1111, | 26-1735 |
| 41-9746, | 43-3576, | 24-5774, | 27-1375, | 24-5188 |

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

இல்லை


இன்று முதல்

யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

NIGHT HAWKS

(இரவுப் பருந்துகள்)

(தமிழ் விளக்கம்)

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30 மணி,

மாலை 4.00 மணி, 6.00 மணி

(சி-6959)



## நவோதயம் - - வடக்கில்

### கிறிஸ்தவப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கென தலைமைத்துவ பயிற்சி மாநாடு

ஆகஸ்ட் மாதம் 2 (மாலை) முதல் 6 (மாலை) வரை வதிவிடப் பாசறையாக யாழ். கைதடி நவீல்ட் பாடசாலையில் இடம்பெறும்.

விண்ணப்பப் படிவம் கைப்பிரதியை உங்களது சபைப் பிரிவிலோ அல்லது கீழ்க்காணும் முகவரியிலோ காலை 9-00 – 1-00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:

**நவோதயம்**

462, பிரதானவீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணம்.

குறித்த எண்ணிக்கையானவர்களே பங்குபற்ற இருப்பதால் உங்களது பதிவுகளை காலம் தாழ்த்தாது அனுப்பி வைக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி யூலை 10

நவோதயம் ஜெபநாள் ஜூலை 10 காலை 9-00 – 12-00 வரை யாழ். பரியோவான் ஆலய Fig மண்டபத்தில் நடைபெறும்

(5282) -செயற்குழு


## மரண அறிவித்தல்

### செ. பூபாலசிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

சாவகச்சேரி, சரசாலையை பிறபபிடமாகக்கொண்ட செ. பூபாலசிங்கம் அவர்கள் (5-7-93) நேற்று காலமாகி விட்டார். இவர் மாணிக்கம் (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும். யோகசிங்கி (ஹொலன்ட்), சுதேஸ்னா, சிலோஸ்னா, வனசிங்கி ஆகியோரின் அருமைத் தந்தையும் ஞானேஸ்வரதாஸ், ஜெயச்சந்திரன் ஆகியோரின் மாமனாரும், துரைசிங்கி, இரத்தினசிங்கி, லஷ்மி ஆகியோரின் சகோதரரும் சண்முகரத்தினம் அவர்களின் மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் (இன்று) பி.ப. 2மணிக்குஇடம்பெற்று ஆலடி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சரசாலை, ஜெயச்சந்திரன்
சாவகச்சேரி, (5287) (மருமகன்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 06-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.